# ආනන්දය
# ජාතික පුබුදුවේ තෝතැන්න

ஆனந்தாக் கல்லூரி

தேசிய விழிப்புணர்ச்சியின் தோற்றுவாய்

# ANANDA COLLEGE
# THE CRADLE OF NATIONAL REAWAKENING

කොළඹ ආනන්ද මහා විද්‍යාලයයේ
වාර්ෂික ත්‍යාග ප්‍රදානෝත්සවයේ දී
ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා විසින්
පවත්වන ලද කථාව

கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற வருடாந்த
பரிசளிப்பு விழாவின்போது அதிமேதகு ஜனாதிபதி
ரணசிங்க பிரேமதாச அவர்கள்
ஆற்றிய உரை

ADDRESS OF
HIS EXCELLENCY RANASINGHE PREMADASA,
PRESIDENT, AT THE ANNUAL PRIZE GIVING OF
ANANDA COLLEGE, COLOMBO

1991.07.19

-4 | 2023

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

# කොළඹ ආනන්ද මහා විද්‍යාලයයේ වාර්ෂික ත්‍යාග ප්‍රදානෝත්සවයේ දී ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා පැවැත්වූ කථාව – 1991.07.19

ආනන්ද මහා විද්‍යාලය ආරම්භ කොට දැන් අවුරුදු 105ක් වෙන බව විදුහල්පතිතුමා ගෙන් දැනගන්නට ලැබුණා. දීර්ඝ ඉතිහාසයක් තමුන්නාන්සේලා ගේ මේ විද්‍යාලයට තිබෙනවා. පාසලක් හැටියට තමුන්නාන්සේලා සතු ඉතිහාසය වර්ණවත් වී තිබෙනවා. මේ විද්‍යාලය ආරම්භ කළ වකවානුවත්, මේ විද්‍යාලය ආරම්භ කරන්නට හේතු භූත වුණු කරුණුත්, මේ විද්‍යාලය ආරම්භ කළ උතුමන්ුත් ගැන කල්පනා කරන විට, මේ කාරණා තුන තමුන්නාන්සේලා ගේ ඉතිහාසයට වෛවර්ණවත් භාවයක් ලබාදෙනවා. ආරම්භ වුණු වකවානුව මෙවැනි විද්‍යාලයක් ආරම්භ කරන්නට හේතු වුණු කරුණු ඒ වගේ ම මේ විද්‍යාලය ආරම්භ කරන්නට පුරෝගාමී වූ උතුමන් මේ කරුණු තුන තමුන්නාන්සේලා ගේ ඉතිහාසය වඩාත් දීප්තිමත් කරනවා.

මෙ වැනි විද්‍යාලයෙක අවශ්‍යතාව තදින් ම දැනුණු වකවානුවක් මේ රටේ තිබුණා. ඒ වකවානුව තමා දීර්ඝ කාලයක් අපේ රට විදේශීය පාලනයට යටත් ව තිබූ අවදිය යි. පෘතුගීසි, ඕලන්ද, පාලන අවසාන වී අවුරුදු 150 පමණ ඉංග්‍රීසි අධිරාජ්‍යය යටතේ මේ රට ක්‍රියාත්මක වුණා. වරින් වර මේ කාලය තුළ අපේ රටේ මතු වුණු ශ්‍රේෂ්ඨ ජාතික වීරවරයන් ගේ අත්දැකීම් පසු කාලයෙක මෙ වැනි වැඩපිළිවෙළකට හේතු වුණා.

2 – .

යුගයේ අවශ්‍යතාව තුළින්

අප රටක් හැටියට විදේශීය පාලනයකට යටත් ව සිටියා පමණක් නො වෙයි. ඒ පාලනය තුළ අපේ දේශීය ගුණවගාව ඉතා දරුණු අන්දමින් යටපත් කරන්නට පටන්ගත්තා. ජනතාවක් හැටියට අප හුරුපුරුදු කරගත් සාරධර්ම අපෙන් ගිලිහී යන බව පෙනුණා. ඒ අන්දැකීම්වල උපරිම අවස්ථාව තමයි, මොහොට්ටිවත්තේ ගුණානන්ද මාහිමිපාණන් වහන්සේ, හික්කඩුවේ ශ්‍රී සුමංගල නායක හිමිපාණන් වහන්සේ ආදී උතුමන් ගෙන් උදා වුණු යුගය. ගිහි පැත්තෙන් ඒ ශ්‍රේෂ්ඨ පැවිදි උතුමන් ගේ ව්‍යායාමය නිසා අපේ රට කෙරෙහි විශේෂ බැල්මක් යොමු වුණා විදේශිකයන් ගේ පවා.

එයින් එක් කෙනෙක් තමයි කර්නල් හෙන්රි ස්ටීල් ඕල්කොට්තුමා. එතුමා ඇමරිකන් ජාතිකයෙක්. බුද්ධ ධර්මය ගැන හැඟීමක් ඇති කරගනිමින් ඉන්න වකවානුවේ එ දා මෙහි පැවැති ආගම ධර්මය පිළිබඳ විවාදයෙක තොරතුරු කියවන්නට ලැබිලා මෙ රටට පැමිණියා. එතුමාට හික්කඩුවේ ශ්‍රී සුමංගල මාහිමිපාණන් වහන්සේ ගේ ආස්වාදය ලැබුණා. එ වෙලාවේ තරුණයකු හැටියට සමාජයට පැමිණි ශ්‍රීමත් අනගාරික ධර්මපාලතුමා එ දා පැවැති වහල් තත්ත්වයේ ආදීනව පෙන්නා දෙන්නට පටන්ගත්තා. ඒ ව්‍යායාමයේ ප්‍රතිඵලයක් තමයි ආනන්ද මහා විද්‍යාලය.

කුමක් සඳහා ද ආනන්ද මහා විද්‍යාලය අවශ්‍ය වුණේ ? අප හුරු පුරුදු කරගත් සාරධර්ම ප්‍රගුණ කරන දරු පරම්පරාවක් ඇති කරන්න. ඒ වන විටත් සම්පූර්ණයෙන් අවුරුදු 150 ක පමණ ඉංග්‍රීසි පාලනය තුළ අපේ ජනතාව සම්පූර්ණයෙන් ම අතර මං වී සිටියා. ආර්ථික අතින් අතරමං වුණා. අපේ ආවේණික වගාවන් නො සලකා හැරිය නිසා. ආධ්‍යාත්මික අතින් අප අසරණ වුණා. ක්‍රමානුකූල ව අප තුළ තිබුණා වූ සාරධර්ම මකාදැමීමෙන් රටක් හැටියට පමණක් නො වෙයි, මිනිසුන් හැටියටත් මානසික අන්දමින් ම වහලුන් බවට පත් කරගත්තා. එහෙම නොකළා නම් රටක් වහල්භාවයෙන් තබාගැනීම අපහසු යි.

ඉංග්‍රීසි ආණ්ඩුකාරවරයන් ලියා ඇරියා වූ සටහන් අදත් තිබෙනවා. " මේ ශ්‍රී ලංකාව ලෙහෙසියෙන් පහසුවෙන් පාලනය කරන්න නම්, මේ මිනිසුන් තුළ ගැප් වී තිබෙන සාරධර්ම සහ ගුණවගාව විනාශ කළ යුතු යි." ඒ ලියූ තීන්තෙන් ම අදත් ලන්ඩන් කෞතුකාගාරයේ මේ සටහන් තිබෙනවා.

ඒ තත්ත්වයෙන් ඉදිරි පරම්පරාව ගලවාගැනීමට යි ආනන්ද විද්‍යාලය වැනි විදුහල් ගණනාවක් එදා පිහිටුවා තිබුණු සීමාසහිත පරමවිඥානාර්ථ බෞද්ධ සමාගම මගින් ආරම්භ කරන්නට යෙදුණේ. මේ සඳහා ඔල්කොට්තුමා ගෙන් විශේෂ අනුග්‍රහයක් ලැබුණා. එ වකටත් අපේ රටේ උගතුන් කීප දෙනකු එංගලන්තයට ගිහින් අධ්‍යාපනය ලබමින් සිටියා. ඒ උගතුන් තුළ කුඩා කාලයේ දී ම තමන් ගේ දෙමාපියන් විසින් පුරුදු පුහුණු කළ දහම් සංකල්පය ඉස්මතු වුණා. ශ්‍රීමත් ගරු බාරොන් ජයතිලක මැතිතුමා, ශාස්ත්‍රාචාර්ය පී. ද ඇස්. කුලරත්න මැතිතුමා, මහාචාර්ය ගුණපාල මලලසේකර මැතිතුමා වැනි විද්වතුන් මේ ව්‍යායාමයේ පුරෝගාමීන් බවට පත් වුණා. ඒ නාමාවලිය බොහොම දිගයි. ආනන්ද විද්‍යාලයේ ශිෂ්‍යයන් ඒ ඉතිහාසය හදාරනවාට මට කිසි ම සැකයක් නැහැ.

ආනන්ද විද්‍යාලයයේ අධ්‍යාපනය නොලැබූ කතෝලික ශාන්ත ජෝශප් විද්‍යාලයේ ඉගෙන ගත් මා දන්නවා නම් ඒ ඉතිහාසය, මගේ හිතේ ආනන්ද විද්‍යාලයයේ සිසුන් මේ ඉතිහාසය ඊටත් වඩා හොඳින් දන්නවා ඇති.

අද අපට එහෙනම් අහන්න තියෙනවා ප්‍රශ්නයක්. මේ විදියට ආරම්භ කළ ආනන්ද — නාලන්ද, ධර්මරාජ — මහින්ද ආදී රට පුරා ම බොහො ම අමාරුවෙන්, දුක් මහන්සියෙන් ජනතාව ගෙන් සල්ලි සම්මාදන් කරගනිමින් පිහිටවූ මේ විද්‍යාලවල ඒ පරමාර්ථය අද එ ලෙසින් ම ඉටු කෙරෙනවා ද කියන ප්‍රශ්නය.

සාමාන්‍ය අධ්‍යාපනයෙන් බැහැර භාෂා ශාස්ත්‍ර, ගණිත මිණිත, කලාශිල්ප, විද්‍යා තාක්ෂණ ආදි විෂයයන් අප හැදෑරිය යුතු යි. ඒවා ප්‍රගුණ කළ යුතු යි. ඉන් බැහැරව ආනන්ද විද්‍යාලය වැනි විදුහල් ඇති කළ පරමාර්ථයක් තියෙනවා. ඒ පරමාර්ථ අප අදත් ඉෂ්ට කරන තත්ත්වයකට විධිවිධාන යොදා තිබෙනවා. ඒ පරමාර්ථය නම්, මිනිසකු හැටියට උපන්න මා මටවත් මේ සමාජයේ සෙසු අයටවත් හිරිහැරයක් කරදරයක් නොවන අන්දමට මගේ දින චර්යාව සකස් කරගැනීම, චරිතය හැඩගස්වා ගැනීම, මටවත් අනුන්ටවත් හිරිහැරයක් කරදරයක් නොවන අන්දමට ඒ සඳහා උගන්වන සාරධර්ම කුඩා කාලයේ ඉඳලම අපේ දරුවන්ට ඒත්තු ගැන්වීම. මේවා කියාදීම පමණක් නොවෙයි, අවබෝධ කරදීම ඒකෙන් තමන්ටත් සමාජයටත් සිදු වන යහපත ගැන ප්‍රායෝගික දැනුමක් හා පුහුණුවක් ලබාදීම අත්‍යවශ්‍ය බව මේ ධර්ම විද්‍යාලය ආරම්භ කළ අපේ ඒ පුරෝගාමී ඒ උතුමන් ගේ පරමාර්ථය වුණා.

තමන්ට වත්, අනුන්ට වත් හිරිහැරයක් නැති ව ජීවත් වෙන්න පුළුවන් ක්‍රමය. ජීවන ක්‍රමය සඳහා මෙ වැනි විදුහල් අවශ්‍ය වුණේ එදා ඒ වකවානුවෙ. ඒ අවශ්‍යතාව තවමත් එසේ ම තියෙනවා. කුඩා කාලයේදී ම තමන් හදා වඩන දෙමවුපියන්ට, තමන්ට උගන්වන ගුරුවරුන්ට තමන් පෝෂණය කරන නැදැයන්ට – වැඩිහිටියන්ට ගරු කිරීම පුරුදු කළ යුතු යි. මේ මගේ අම්මා, මේ මගේ පියා මා ඇතිදැඩි කරන්න මොන වෙහසක් ගත්තා ද යන්න ගැන කුඩා කාලයේදී ම අවබෝධය ඇති කරන්න ඕනැ.

මේ සඳහා නොයෙකුත් ක්‍රම ඉදිරිපත් කළ හැකි යි. දිනපතා තුනුරුවන් වැඳීමෙන් පසු ව අම්මටත් තාත්තටත් වඳින්න. මා දස මසක් දරා ගෙන මෙ ලෝකයට බිහි කළ තමන් ගේ ලේ කිරට හරවා මා පෝෂණය කළ මෑණියන්ට, ඔබ වහන්සේ මට මෙ කළ උපකාරය කවදාවත් අමතක කරන්නේ නැහැ. වෙහෙස මහන්සි වෙමින්, දුක් කරදර විඳිමින්, අප පෝෂණය කරන්නට මවටත්, පවුලටත් උනන්දුවෙන් ක්‍රියා කරන පියාණන්ටත් ඔබ වහන්සේ ගේ ගුණසමුදය මා නිරතුරුවම සිහිපත් කරනවා. වැඩිහිටියන්, උගන්වන ගුරුවරුන්, නමුත්තාත්සේලා ගේ දැනුම දානය කරන්න, අප යහපත් අය බවට පත් කරන්න, අපේ දැනුම වැඩිදියුණු කරන්න ආදී වශයෙන් ගුරු දෙගුරුන් හට දක්වන සැලකිල්ල කුඩා කාලයේ දී ම ඇති කළ යුතු යි.

ඒ කුඩා කාලයේ දරුවන් මෙ පිළිබඳ ව තියම අර්ථය දන්න නිසා නොවෙයි, එය දැනගැනීමට මහ පෙන්වීමක් ඇති කරන්න. ඒවාට වුවමනා කරන පොත්පත් එදා තිකුත් වුණා, බොහො ම ගම්භීර ලෙස නොවෙයි, බොහො ම චාම් ලෙස. සිරිත් මල් දම් නමැති කුඩා පොත මොන තරමට මෙ සාරධර්ම අපේ දරුවන් තුළ ඇබ්බැහි කරවන්නට හේතු වුණා ද කියන එක ඇත්ත වශයෙන්ම පර්යේෂණ කළ යුතු යි. ඉතා සරල බසින් ලියූ ගී පද මාලාවකින් දරුවන් ගේ පමණක් නොවෙයි, වැඩිහිටියන් ගේත් හදවත් විනිවිද යන අන්දමට සිරිත්මල්දමෙහි ඒවා නිර්මාණය කර තිබෙනවා.

ඊළඟට ලෝකයේ ස්වභාවය තේරුම්ගන්න වුවමනා කරන දැනුම ලැබෙන ලෝවැඩ සඟරාව, සුභාෂිතය, යොදාගත්තා මෙ වැඩපිළිවෙළ වඩාත් පෝෂණය කරන්නට. ඒවායේ එන උපමා උපමේයවලින් සමාජයේ යථාර්ථය පැහැදිලි වෙනවා. විශ්වාසයක් අනුව නොවෙයි, ඒ

වැඩපිළිවෙළ ක්‍රියාත්මක කෙරුණේ. අවබෝධයක් අනුව. සුභාෂිතයේ කවි කියවා බලනවිට, පේනවා. එහි උපමාවලින් යථාර්ථය මොන තරම පැහැදිළි කරනවා ද කියා. වෙනත් පත පොත ගැන සඳහන් කරන්නට කාලය ගන්නේ නැහැ. මා පෙන්නන්න හදන්නේ වහල් කාලේ. අප තුළ ඇති වේ ගෙන ආ වහල් මානසිකය වෙනස් කරන්න ඒ මගින් අදීන මනසක් ඇති කරන්න තමන්ට වත් අනුන්ට වත් හිරිහැරයක් කරදරයක් නැති ව ජීවත් වෙන්න වුවමනා කරන හැකියාව ලබාදෙන්න. මොන විදියේ වැයමක් දැරුවා ද කියා.

එද ටවර් හෝල් නෘත්‍ය ශාලාව ගොඩනැගීමට සෙනෙවිරත්න පවුල පෙළැඹෙව්වේ කවරෙක් ද ? ශ්‍රීමත් අනගාරික ධර්මපාලතුමා. එතුමා තමයි ටවර් හෝල් නෘත්‍ය ශාලාවට මුල්ගල තැබුවේ. තිතිඥ ජෝන් ද සිල්වා, තිතිඥ චාල්ස් ඩයස් කියන ඒ අපේ ශ්‍රේෂ්ඨ කලාශිල්පීන් දෙ දෙනා මේ ගුණවගාව ඇති කිරීමට වුවමනා කරන හැඟීම් ජනතාව ගේ සිත්සතන් තුළට කිඳා බස්සවන්න නොයෙකුත් නාට්‍ය ඉදිරිපත් කළා. ජාතක කතා පමණක් නො වෙයි. සමාජයේ ඇති වී තිබෙන පරිහානිය ඉස්මතු කොට පෙන්වනවා. ඒ මගිනුත් අප තුළ ඇති වුණා වූ වහල් මානසිකය නැති කරන්න ලොකු වැයමක් තිබුණා.

දැන් අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ භාෂා ශාස්ත්‍ර, විද්‍යා, කලා ශිල්ප, තාක්ෂණය ආදී ඔය දැනුම පිළිබඳ ව නිර්දේශ සමාන යි කොහෙත්. දේශීය වශයෙන් පමණක් නො වෙයි, අන්තර්ජාතික වශයෙනුත්. දැනීම පමණක් නොවෙයි. හැදියාවත් අත්‍යවශ්‍ය යි මනුෂ්‍යයන්ට. ඔනැ ම කරුණක දී මෙක සත්‍යයක්. මේ යුක්තිය ඉටු වෙයි ද මෙයින් මට වත් සමාජයට වත් අසාධාරණයක් වෙයි ද, අපරාධයක් වෙයි ද කියලා, කිරා මැන බලන්නට වුවමනා කරන චරිත ශක්තිය අපේ දූ දරුවන් තුළත් ඇති කරන්න ඔනැ ය කියන පරමාර්ථය තමයි මේ විධියේ විද්‍යාල ඇති කිරීමෙන් බලාපොරොත්තු වන්නේ.

මුල් අරමුණු

එහෙම නැතුව ක්‍රිස්තියානි මිෂනාරීන් ඇවිත් පාඨශාලාවල් ආරම්භ කළා. අපත් බෞද්ධයන් හැටියට බෞද්ධ පාඨශාලා ඇති කරලා, වෙනසක් කරන්න ඔනැ යන හැඟුමෙන් නො වෙයි බෞද්ධ පාසල් ඇරැඹුණේ. පාසල පටන්ගන්නා වෙලාවට පන්සිල් සමාදන් වෙලා, පාසල පටන් ගැනීමෙන්



3 –

පමණක් බෞද්ධ කියන නාමය රඳවා ගන්නට කල්පනා කළේ නෑ. සාමාන්‍ය අධ්‍යාපන ක්‍රමය තුළින් එද ලබාගන්නට අපහසුව තිබුණු චරිත ශක්තිය වගා කරන්න අත්‍යවශ්‍ය විද්‍යායතනය හැටියට තමයි, ආනන්ද විද්‍යාලයෙන් පටන් අරගෙන මේ වැඩපිළිවෙළ ගෙනගියේ. ඇත්තවශයෙන්ම ඉස්සෙල්ලාම එය පටන් අරගත්තේ ඉරුදින දහම් පාසලෙන්. ආරම්භ කළේ පිටකොටුවේ මැලිබන් විදියෙන්.

දැනට ඉරිදාට පමණක් මෙ කියාදීම අපි ආරම්භ කරමු. සදචාර ගුණධර්ම ප්‍රගුණ කරන්න පුළුවන් වන විධියේ පාසල් ක්‍රමයක් ආණ්ඩුවේ අධ්‍යාපන පරිපාටිය අනුව පසුව ඇති කරමු. සිසුන් විභාගවලට පුරුදු පුහුණු කරන අතර, මේ චරියාධර්ම ක්‍රමය අපේ දරුවන්ට ලබාදීමට, ඔවුන්ට අදීනව හිතන්න, ඔවුන් තුළ අද ඇති වෙගෙන එන, ඔවුන්ගේ දෙමව්පියන් තුළ ඇති වී තිබෙන වහල් මානසිකය ඉවත් කරන්න අප මේ වැඩපිළිවෙළ ක්‍රියාත්මක කරන්න ඕනෑ කියලයි එද ඒ උතුමන් විද්‍යාල පටන්ගත්තේ.

ඔල්කොට් ශාලාවේ තමි තිබුණා පටන්ගත් දවසේ ඉඳලම විදුහල්පතිවරුන් ගේ පින්තූර. මට නම් අද පේන්න නෑ ඒ පින්තූර. ඒ පින්තූර පේන්න තියන්න ඕනෑ.

සිංහල උගතුන් පමණක් නො වෙයි, මේ ව්‍යායාමයට ඉදිරිපත් වූණේ, දහැමි සාරධර්ම පිළිගත්ත විදේශික විදුහල්පතිවරුන්, තමුත්තාත්සේලා ගේ විද්‍යාලයේ හිටියා. ඒ නිසා මෙය ජාතිවාදී වැඩපිළිවෙළක් උඩ ආරම්භ කළ ක්‍රියාදාමයක් නො වෙයි. මුළු ලෝකයටම යහපතක් වන ධාර්මික ඉගැන්වීම් ක්‍රමය දැහැමි ජීවිතයක් ගත කිරීමට වුවමනා කරන දැනුම සහ පුහුණුව විදේශික විදුහල්පතිවරුන්, ලංකාවේ බර්ගර් ජාතික විදුහල්පතිවරුන්, බුල්ජන්ස් මැතිතුමා වැනි විදුහල්පතිවරුන් මේ සාරධර්ම පිළිගත්තා.

ආනන්ද මහා විද්‍යාලයේ ශ්‍රේෂ්ඨ ගුරුවරුන් අතරේ ද්‍රවිඩ ජාතික ගුරුවරුන්, මුස්ලිම් ජාතික ගුරුවරුන් උන්නා. ඒ. සිවගුරුනාදන් මහතා, ටී. බී. ජයා මහතා ආදී ශ්‍රේෂ්ඨ ගුරුවරුන් උන්නා.

### පරිහානියට එරෙහි ව

අපේ දරු පරම්පරාවේ චරිත ශක්තිය ඇති කරන්න ඕනෑ. ජීවිතයේ ඕනෑ ම අර්බුදයකට අභීත ව, අදීන ව මුහුණ දෙන්න ඕනෑ කරන චරිත

ශක්තිය ඇති කරන්න ඕනෑ. ඇත්තට යුක්තියට හිස නමන, අයුක්තියට අසාධාරණයට රුකුල් නොදෙන, කොයි තරම් තමන්ට ලාභ ප්‍රයෝජන නැති වුණත් සාධාරණය තකන දරු පරපුරක් අප ඇති කරන්න ඕනෑ. මන්ද ? වහල් යුගයෙන් ඒ සාරධර්ම ඔක්කොම යට කරගෙන. අපේ ජනතාව කයින් පමණක් නො වෙයි, මනසින් වහල් භාවයට පත් වේගෙන ආවා. කිසිම විචාරයක් නැති ව පාලකයන් ගේ නොයෙකුත් අපට අනවශ්‍ය ගතිසිරිත් පුරුදු පුහුණු කරගන්න පටන්ගත්තා. ඒ මඟින් ආධ්‍යාත්මික පිරිහීමක් පමණක් නො වෙයි, ආර්ථික පරිහානියකටත් පත් වෙන්නට පටන්ගත්තා. යුරෝපයට ගැලපෙන විධියට පෙරදිග අප ජීවත් වෙන්නට පුරුදු වෙන්න පටන්ගත්තා. ඔවුන්ගේ කෑම් බීම්, ඇඳුම් පැළඳුම්, නොයෙකුත් විලාසිතා අනවශ්‍ය දේවලට අප හැඩ ගැසුණා. ඒ නිසා අප ආධ්‍යාත්මික වශයෙන් පිරිහුණා පමණක් නො වෙයි, ආර්ථික වශයෙනුත් අප තව දුරටත් ඔවුන්ට යටත් කරගෙන තබාගන්නට වැඩපිළිවෙළ සැකසුණා. ඒ නිසා තමයි, ඒ පරිහානියෙන් බේරා ගන්න ආනන්ද විද්‍යාලය වැනි විදුහල් ආරම්භ කළේ.

### ආනන්දයන් හඳුනාගැනීම

නමුත්තාත්සේලා බොහොම ගෞරවයෙන් කියනවා 'අපි ආනන්ද ආදි ශිෂ්‍යයෝ', එහෙම නැත්නම් 'අපි වර්තමාන ආනන්ද ශිෂ්‍යයෝ' කියා. කොහොම ද වෙනස සොයාගන්නේ ? ටයි එකේ පාටින් ද ? මේ ටයි දනවා නේ හැම ඉස්කෝලවලම. ඇඳුමෙන් ; ඒ ඇඳුම අඳිනවා නේ හැම ඉස්කෝලවලම. ඔය විද්‍යාලයේ පාට නැතිව පාරට බැස්සොත්, මේ ශිෂ්‍යයා සෙන්ට් ජෝශප් විද්‍යාලයෙන් ද, සහිරා විද්‍යාලයෙන් ද, ආනන්ද විද්‍යාලයෙන් ද නැත්නම් වෙස්ලි විද්‍යාලයෙන් ද කියා කොහොම ද සොයාගන්නේ. එයා ගෙන් අහන්නට ඕනෑ. දැන් ඉතින් අපේ ශිෂ්‍යයන්ගේ හිතේ ප්‍රශ්නයක් මතුවෙනවා ඇති, එහෙනම් මොනවා ද අපට කරන්න පුළුවන් කියලා.

ආනන්ද ශිෂ්‍යයා මහ මාවතේ යන විටත්, තැනක රැඳී සිටින විටත්, තමන් ගේ අවශ්‍යතාවන් ඉටුකරගන්නට යන විටත්, තමන්ට වත් අනුන්ට වත් හිරිහැරයක් කරදරයක් නැති විදියට හැසිරෙනවා නම්, අන්න ආනන්ද ශිෂ්‍යයා. පාරේ බැහැලා යන කොට පුදුමයි. අර ළමයි කට්ටිය එක විදියකට. මේ ළමයි කට්ටිය එක විදියකට. මේ ළමයින් ඇරිලා ගෙදර යන වෙලාවලට අප බලා ඉන්නවා. මට කිසි වෙනසක්

පේන්නෙ නෑ මේ එක පාසලකින් වත්. ඔක්කොම එක විදියකට. මොකක්ද වෙනස ? මේ ගැනත් ටිකක් කල්පනා කරන්න.

මා ඉගෙන ගත්තේ කතෝලික විද්‍යාලයේ. මේ විද්‍යාලයේ වර්තමාන ප්‍රධානතුමා මෙතැන ඉන්නවා. මා දන්නේ නැහැ මොන හේතුවක් නිසා ද කියා මගේ පියා ලොකු කැමැත්තක් දක්වූවා ලෝරන්ස් විද්‍යාලයෙන් මා ඉවත් කරගෙන සෙන්ට් ජෝසප් විද්‍යාලයට යවන්න. ඉතින් නොයෙක් අය කිව්වා හුඟාක් අමාරු නේද සෙන්ට් ජෝශප් විද්‍යාලයට ඇතුළු කරන්න කියා. ඒ කාලෙ හැඟීමක් තිබුණා බෞද්ධ ළමයින්ට සෙන්ට් ජෝශප් විද්‍යාලයේ දොර ඇරෙන්නෙ නැහැ යි කියලා. එහෙත් පසු කාලයකවත් මට කිව්වේ නැහැ මොකක් ද ඒ හේතුව කියා. එතුමා අනගාරික ධර්මපාලතුමා බොහොම අනුගමනය කරන කෙනෙක්. පී. ද එස්. කුලරත්න මහතා වැනි ඒ ශ්‍රේෂ්ඨ විද්වතුන් අගය කළ කෙනෙක්. ඒ යුගයේ ආරම්භවී තිබුණු නොයෙකුත් ජාතික ව්‍යායාම කෙරෙහි ලොකු ලැදියාවක් දක්වූ කෙනෙක්. ඒ වුණත් සෙන්ට් ජෝශප් එකට දන්න ඕනෑ. බොහොම අමාරු වැඩක්.

අපේ ඥාතිවරියක් මාතර කොන්වන්ට් එකේ සේවය කළේ. එතුමිය කතෝලික කාන්තාවක්. එතුමිය දැනගෙන හිටියා, හඳුනාගෙන හිටියා, එ දා සෙන්ට් ජෝශප් විද්‍යාලයයේ විදුහල්පති ව සිටි ඇම්. ජේ. ලෙගොක් පියතුමා. අපේ පියා ගේ බලගතු පෙරැත්තය නිසා එතුමිය ඇවිත් මා එක්කර ගෙන ගියා සෙන්ට් ජෝශප් විද්‍යාලයට. අපේ පියා කොණ්ඩෙ බඳින එක් කෙනෙක්. ඒ කාලෙ තිබුණු සභ්‍යත්වයට අනුව. මගේ පියා කල්පනා කළා එතුමාත් විදුහල්පතිතුමා හමු වන්නට ගියහම මේ ළමයි ඊට පසුව මට විහිළු කරයි කියා. එතුමා එළියෙන් හිටියා. අර ඥාතිවරිය තමයි මා එක් කරගෙන ගියේ. එය වාරයේ මැද. ළමයි අලුතෙන් ඇතුළු කරගන්නෙ නැහැ. නමුත් එතුමිය ගිහින් කතා කරලා කිව්වා, ෆාදර් ලෙගොක්ට 'මා ආවෙ සම්ප්‍රදයයට විරුද්ධ ඉල්ලීමක් කරන්න, නමුත් පුදුම දෙයක්, බොහොම ලේසියෙන් පුළුවන් ආනන්ද විද්‍යාලයට, නාලන්ද විද්‍යාලයට ඇතුළු කරගන්න. නමුත් සෙන්ට් ජෝශප් විද්‍යාලයට ඇතුළු කරගන්න ඕනෑ කියා.'

එ විට ලෙගොක් පියතුමා මගෙන් ප්‍රශ්න කීපයක් ඇහුවා.

" බෞද්ධයෙක් ද ? " මා කිව්වා. "ඔව." කියා. එතකොට මම දහම් පාසල් යන කාලෙ. "ඇයි බෞද්ධයෙක් හැටියට ඉන්නෙ ?" මම කිව්වා "මම බුදුරජාණන් වහන්සේට බොහොම කැමති" යි කියා. "ඒ ඇයි ?" "උන් වහන්සේ බොහොම අනුකම්පාවයි. හොඳයි." වෙන විභාගයක් නෑ. එක පාරටම මා ඇතුළු කරගත්තා පන්තියට. ලෝරන්ස් විද්‍යාලයේ සහතිකය අනුව ඊට අදාළ පන්තියටත් දැම්මා. ඒ කාලේ හැඟීමක් තිබුණා යම් පන්තියක වෙන ඉස්කෝලයක හිටියා නම් ඊට වඩා පන්තියකට පල්ලෙහායින් දන එක. මගේ හිතේ මගේ වාසනාවක් වෙන්න ඇති.

දැන් මා කියන්න එන්නේ ඒ සෙන්ට ජෝශප් විද්‍යාලයේ අප ඉගෙන ගත්තා කාලේ මාත් එක්ක ඉගෙනගත් විශාල පිරිසක් ඉන්නවා. මට වඩා ජ්‍යෙෂ්ඨ අය, මට වඩා කණිෂ්ඨ අය, අද සමාජයේ උසස් තත්ත්වයන් ගෙන සිටිනවා. ඒ කවුරුත් සාක්ෂි දෙයි. අපට ප්‍රායෝගික පුහුණුවක් දුන්නා ජීවිතයේ යථාර්ථය තේරුම් ගන්න. අපට නියම කරලා තිබුණා පන්තියේ ශිෂ්‍යයන් 30 දෙනෙක් හිටියා නම් වාරයෙන් වාරයට ඒක බෙදලා ශිෂ්‍යයන් දෙන්නා තුන් දෙනා වශයෙන් පුහුණු කරන්න. පාසල පටන් ගන්න ඉස්සෙල්ලා එන්න ඕනෑ. පන්ති කාමරය සුද්ධ කරන්න ඕනෑ. ඩෙස් බංකු පිළියෙළ කරන්න ඕනෑ. නිසි විදියට සකස් කරන්න ඕනෑ. පන්තිය තිබෙන ගොඩනැගිල්ලෙන් අවට භූමිය කැළි කසළ තිබේ නම් ඒවා ඉවත් කරන්න ඕනෑ ශිෂ්‍යයෝ දෙන්නා තුන් දෙනා වශයෙන්. මුළු මාසයටම වැඩපිළිවෙළ ලැස්ති යි.

බලන්න. මොන තරම් වටිනා පුහුණුවක් ද ? තමන්ගේ පන්තිය තමන් සකස් කරගන්න ඕනෑ. ඊට පස්සෙ කට්ටියක් නතර වෙන්න ඕනෑ. පන්තියට ගියාට පස්සේ ආයෙමත් ඒ ඩෙස් බංකු ආදිය නිසි විදියට තියනවා විතරක් නො වෙයි. පන්ති කාමරය සුද්ධ කරලා යන්න ඕනෑ. ඉතින් අප ඇහුවා මොකද කියා. ඉතින් හෙට උදේට එනවා නේ කට්ටියක් ? නැහැ. බැරි වෙලාවත් ඒ අයට එන්නට බැරි වුණොත් අපට ප්‍රශ්නයක් නැහැ. පන්තිය හදලයි තියෙන්නේ. බලන්න. කොයි තරමට පුහුණුවක් දෙනවා ද. එන අභියෝගයකට මුහුණ දෙන්න.

දෙමවුපියන් ගෙන්වනවා පාසලට. පන්තියේ ගුරුවරයා හොඳට හඳුනනවා හැම ළමයකුගේ ම දෙමව්පියන්. අප මෙයාට වැඩපිළිවෙළක් කියලා තියෙනවා. පාඩම් කරන් එන්න මෙච්චර වෙලාවක්. ක්‍රීඩා කරන්න

මෙච්චර වෙලාවක්, හෙටට පාසලට එන්න සූදානම් වෙන්න මෙච්චර වෙලාවක්. සපත්තු තිසි විදියට සකස් කරගන්න. ඇඳුම් පැළඳුම් තිසි විදියට සකස් කර තියන්න. ඒවා කිසිවක් හෙට උදේට කරන්න බැහැ. අද ඒවා කරලා තැන්පත් කරලා තමයි මෙයා නින්දට යන්නේ. දෙමව්පියන්ට කියනවා. ඒ වැඩේ කෙරෙනවා ද නැත් ද කියා අධීක්ෂණය කරන්න. පුරුදු කරනවා.

මේ අදහස මා නිකං තමුන්නාන්සේලා ඉදිරියේ තැබුවේ. එදා අප ලැබූ පුහුණුව අදටත් අපට ප්‍රයෝජනවත්. සූදානමක් තියෙනවා. දූත් බාලදක්ෂයන් ගෙත් පරමාර්ථය සූදානමක් තියෙන්නට ඕනැ. විකල්පයක් තියෙන්නට ඕනැ. ගුරුවරුන් නිතර ම කියා දුන්නේ, යම් දෙයක් යම් පිළිවෙළකට ක්‍රියාත්මක කරන්නට බලාපොරොත්තු වෙනවා නම්, කල්පනා කරලා බලන්න, ඒකට ඇති විය හැකි බාධා මොනවා ද කියා. ඒ බාධා ඇතිවනවාට ම නොවෙයි, හිතලා බලන්න, මොන මොන බාධා ඇති වෙයි ද කියා. හිතලා ඒවාටත් සූදානම් වෙන්න.

ආනන්ද විද්‍යාලය ඒ කාලේ උසස් කීර්තියක් ලැබුවා. ඒ කීර්තිය නම්, සාරධර්ම ප්‍රගුණ කෙරෙන මධ්‍යස්ථානයක් හැටියට. අර මේ විදියේ පුහුණුවක්, අප ඉගෙන ගත්තා විද්‍යාලයෙන් ලැබෙන අතර, අපේ කනට වැටුණා ම ආනන්ද විද්‍යාලයේ ඉගැන්වීම පරිපාටියේ විශේෂත්වයක් තියෙනවා. ධර්මාචාර්යවරයකු හිටියා හැම කාලෙම. අපේ බලංගොඩ ආනන්ද මෛත්‍රිය මහානායක මාහිමිපාණන් වහන්සේත්, ආනන්ද විද්‍යාලයේ ඉගෙන ගෙන ආනන්ද විද්‍යාලයෙම ධර්මාචාර්යවරයකු වුණා. මා දන්නා කාලේ මා ඇවිත් තිබෙනවා ආනන්ද විද්‍යාලයට. පාසල් වියේ ඉඳලම අපේ නොයෙක් සමාජ කටයුතු සඳහා මේ විද්‍යාලයේ විද්වතුන් හමුවන්න. ඒ වෙලාවලදී විද්‍යාලයේ ඉගැන්වීම් කළ ධර්මාචාර්යවරුන් වහන්සේලා හමු වෙලා පාළි සංස්කෘත ආදී පෙරදිග භාෂාවල් උගන්වනවා ය කියන ආරංචිය උඩ සෙන්ට් ජෝශප් විද්‍යාලයේ ඩී. ජේ. ඇන්තනී පියතුමා අපේ නියෝජ්‍ය විදුහල්පතිතුමාත් කියන්නට යෙදුණා, අප මේ විද්‍යාලය කොයි විදියට පවත්වාගෙන ගියත්, අප තුළ දේශීය ඌරුව දේශීය සංස්කෘතියට ගැළපෙන වැඩපිළිවෙළවල් අඩු බව අපට පේනවා. එතුමා වෙනම අංශයක් ඇති කළා පෙරදිග භාෂාව පිළිබඳව. බෞද්ධ ගුරුවරයකු පත් කර ගත්තා. සී. ඇම්. ඔස්ටින් ද සිල්වා මහතා.

ප්‍රථම වරට මට ටිබෙට් ජාතික ඇස්. මහින්ද හිමිපාණන් වහන්සේ ගේ

නිදහසේ මන්ත්‍රය කටපාඩම් කරන්නට පෙළඹෙව්වේ සෙන්ට් ජෝශප් විද්‍යාලයෙන්. ඒ අඩුව දැක්කා එදා ඒ පියතුමන්ලා. මේ ආනන්ද මහා විද්‍යාලය, නාලන්ද විද්‍යාලය වැනි විද්‍යාල තුළ දකින්නට තිබෙන විචිත්‍රත්වය, දේශීය ස්වභාවය දැකලා ඒ අඩුව පුරවන්නට එදා ක්‍රියා කළ හැටි මා දන්නවා. මේ භූමිය ශ්‍රේෂ්ඨ භූමියක්.

### ජාතික කේන්ද්‍රස්ථානයක්

අපේ රටේ ස්වාධීනත්වය, සදාචාරය, යම් යම් පියවර තැබූ ඒවා ගැන සාකච්ඡා කළ, උද්ඝෝෂණ ව්‍යාපාර ආරම්භ කළ ශ්‍රේෂ්ඨ භූමියක්. මේ රටේ ඕනෑම කාලීන ප්‍රශ්නයක් පිළිබඳව රැස්වීමක් තිබුණා නම්, ඒ ආනන්ද විද්‍යාලයයේ. සමහර දාට එළිමහනේ. අනෙක් දවස්වලට අර ඕල්කොට් ශාලාවේ. කොටින්ම ආනන්ද විද්‍යාලය ශාස්ත්‍රීය මධ්‍යස්ථානයක් පමණක් නො වෙයි. ජාතික කේන්ද්‍රස්ථානයක් බවට පත් වුණා. එහි තිබුණු විශේෂත්වය මෙකයි. ජාති භේදවාදී ස්වරූපය තිබුණේ නැහැ. ආගම විරෝධී ස්වරූපය තිබුණේ නැහැ. ඉන් බැහැරව දේශීය ධර්මකාමී වැඩපිළිවෙළේ මධ්‍යස්ථානය බවට පත් වුණා. ඒක මතක තියාගන්න. මේ වැඩපිළිවෙළ ක්‍රියාත්මක කළේ ජාති භේද වාදී හැඟීම් ඇති නොවන විදියට. ආගම් භේදයක් ඇති නොවන විදියට. ඒක තමයි ඒ වැඩපිළිවෙළේ ඉතා විශිෂ්ටත්වය. හැරිලා බලන විට අපට පේනවා, මේ ස්වර්ණමය සටහන්. එහෙනම් ආනන්ද මහා විද්‍යාලය, ඒ වාගේම ආරම්භ වුණු සෙසු විද්‍යාලවල ඇති විය යුතු පුනර්ජීවයක් තියෙනවා. අද කොයි තරම් දුරට එය තිබෙනවා දැයි නොදන්නා නිසා මා ඒ ගැන කතාකරන්න යන්නේ නැහැ.

පෙන්වන්න, පාසලේ වර්ණයෙන් බැහැරව මේ ආනන්දියෙක් කියා හඳුනාගන්න පුළුවන් චරිත ශක්තිය. මේ තත්ත්වය පිරිහී යන වකවානුවක් ඇති වුණා ම, ඕල්කොට් විද්‍යාලය මේ භූමියේම ආරම්භ කරලා පරමවිඥානාර්ථ සමාගම ක්‍රියාත්මක කරන වෙලාවේ, විවිධ බලපෑම් හේතු කොටගෙන ඒ තත්ත්වය වෙනස් වන පිළිවෙළක් ඇති වෙන්නට පටන් ගත්තා. වාසනාවට වාගේ ඒ තත්ත්වය වෙනස් කර ගත්තා.

**අද ආනන්ද විද්‍යාලයේ ආදි ශිෂ්‍යයන්ටත් විදුහල්පතිතුමා ඇතුළු ගුරු දෙගුරුන්ටත් ශිෂ්‍යයන්ටත් කල්පනා කරන්න වෙයි මොන පරමාර්ථ පිට ආනන්ද විද්‍යාලය ආරම්භ කළා ද කියලා. අන්න ඒ ගැන කල්පනා කරලා.**

ඊට අවශ්‍ය වයිඩර්ම ක්‍රියාත්මක කිරීම අවශ්‍ය යි. ආනන්ද විද්‍යාලයයේ ඉගෙන ගත්තා නාලන්ද හෝ ධර්මරාජ හෝ වෙනත්, එද පරම විඥනාර්ථ බෞද්ධ සමාගම ආරම්භ කළ බෞද්ධ පාසල්වල ඉගෙනගත්තා සිසු දරු දූරියන්ට දිනපතා තෙරුවන් වඳිනවා නම්, පුදනවා නම්, දෙමව්පියන්ට වඳිනවා නම්, වැඩිහිටියන්ට සලකනවා නම්, ඒ ආචාරධර්ම පිළිපදිනවා නම්, ගුරුවරුන්ට නිසි සැලකිල්ල දෙනවා නම්, පන්තියේදී ආචාරශීලී ව තමන්ගේ ඉගැන්වීම් කරනවා නම්, මම පමණක් නො වෙයි, අනික් මනුෂ්‍යයන් මේ සමාජයේ ජීවත් වෙන්න ඕනෑ ය කියල හැඟීමකින් කුඩා කාලයේ ඉඳලා ක්‍රියා කරනවා නම්, මේ මග තොට පොදු වස්තුව, පොදු දේපොළ, රථවාහන මේ වායේ ආධාර සියලූ දෙනාටම අවශ්‍යයි. ඒවා රැකබලා ගන්න නම්, ප්‍රථමයෙන්ම තමන් ගේ පියා රැක බලාගන්න ඕනෑ. අපේ පන්තිය, අපේ විද්‍යාලය, මේ විද්‍යාල භූමිය, අපේ කේන්ද්‍රස්ථානය, අප කවුරුත් නඩත්තු කරන්න ඕනෑ ය කියන හැඟීමෙන් වැඩ කරන්න ඕනෑ. ඔන්න විශේෂත්වයක් තිබෙනවා. පන්ති කාමරය කොහොම ද තියෙන්න ඕනෑ. ඩෙස් බංකු කොහොම ද තියෙන්න ඕනෑ. කොයි තරම් දුරට මෙහි ස්වරූපය වෙනස් වී තිබෙනවා ද ? විශ්වාස කරන්න අපේ ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් නිසි විදියට යොමු කරවුවොත් පුදුම විදියේ හැකියාවක් ඇති, දරු පිරිසක් යයි අපට ආඩම්බර වෙන්න පුළුවන්.

ගම් උදාව පවත්වන අවස්ථා කීපයකම මෙය විමසා බැලූවා. මෑත කාලයේදීම පල්ලෙකැලේදීත්, කඹුරුපිටියේදීත් අප ලැබුවේ පුදුම අත්දැකීමක්. අප ඒ අවට විද්‍යාලවල සාමාන්‍ය පෙළේ, උසස් පෙළේ සිසු දරු දූරියන්ට අප අවකාශයක් දුන්නා ම පාසලේ ඉගෙනීම් හමාර වුණා ම පැයක් දෙකක් ඇවිල්ලා වැඩ කරන්න. පින්තාරු කිරීම, චිත්‍ර ඇඳීම, ඔවුන්ට කරන්න පුළුවන් වෙනත් දේ තිබෙනවා නම් ඒවා අප පැවරුවා. ඊට නියමිත ගාස්තුවකුත් ඔවුන්ට දුන්නා. සමහර ශිෂ්‍යයන් මට කිව්වා, මේ පහුගිය හත් අට මාසය තුළ මාසයකට රු. 1500 – 2000ක් හොයා ගන්නවා. අප ඒවා ගිහිල්ලා අම්මාට තාත්තාට දුන්නාම, ඔවුන්ට, මොන විදියේ සතුටක් ඇති වුණා ද ? ඒ ව්‍යාපාරයේ වියහියදමුත් හුඟාක් අඩු වුණා. 75%ක් අඩුයි. ඇයි ? මේ සිසු දරු දූරියන්ට මේ අවස්ථාව දුන්නා. සමහර උදවිය පින්සලයක් වත් අල්ලන්න දන්නේ නැති අය, දවසෙන් දෙකෙන් ඉගෙන ගෙන, දක්ෂ ලෙස පින්තාරු කළා. ඒක හොඳටම ප්‍රසිද්ධියේ පෙනෙන්නට තිබුණා. අප දුන් හැමතැනම ඒ.ගැන උනන්දුවක් ඇති කරගෙන යනවා. ඒ නිසා මේ විද්‍යාලය නඩත්තු කරනවා කියන

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

එකේ වගකීමෙන්, අඩු ගණනේ 25%ක් වත් විද්‍යාලයේ ශිෂ්‍යයන් ගුරු දෙගුරුන් භාරගන්නවා. මා දන්නවා හොඳ ආදි ශිෂ්‍ය සංගමයක් තිබෙනවා. උනන්දුවෙන් වැඩ කරනවා. විශාල වැඩපිළිවෙළවල් ආරම්භ කරලා ක්‍රියාත්මක කරනවා. මේ රාජපක්ෂ මැතිතුමා ගේ කාලේ විද්‍යාල භූමිය පුළුල් කරගන්න පුළුවන් වුණා. හොඳ ක්‍රීඩාපිටියක් ලබාගන්න පුළුවන් වුණා. මෙ වාගේ හදා වඩාගන්න පුළුවන් වුණා. ආදි ශිෂ්‍ය සංගමයේ ලොකු උනන්දුවක් ඇති ව.

මේ ආනන්ද විද්‍යාලයට යොදා තිබෙන හැම සතයක් ම පොදු ජන සල්ලි. මේ පොදු ජනතාවගේ හැඟීම්වලින් ප්‍රාණවත් ලෙස ශක්තිමත් වුණු ඓතිහාසික භූමියත් ගොඩනැගිලිත් මේ ආනන්ද විද්‍යාලයේ තියෙන්නේ.

අපේ සිසු දරුදැරියන් දැනීම ලබාගන්නා අතර තමනුත් ප්‍රායෝගික පුහුණුවක් ලබන්නට අධිෂ්ඨාන කරගන්නවා කුඩා කාලයේ ඉඳලම. ඒක බාල්දුවීමක් කියා හිතන්න එපා. මොකක් හරි කරන්න පුරුද්දක් ඇති කරගන්න. කායික වශයෙන්, ප්‍රායෝගික වශයෙන්, යමක් කරන්න. යම කර්මාන්තයක් දැන කියාගන්න.

අද ඇමෙරිකාවෙ මේක නීතියක් බවට පත්වෙලා තිබෙනවා. භාෂා, ශාස්ත්‍ර, විද්‍යා, කලා ශිල්ප, තාක්ෂණය ඉගෙනගන්නා දරුවන් මොකක් හරි ශිල්පයක් — කාර්මික ශිල්පයක්, ඉගෙන ගන්න ඕනෑ. එයාට ඒකෙන් දෙන අදහස තමන්ගේ දැනුමෙන් තමන්ට ජීවත් වෙන්න ශක්තියක් නො ලැබුණත් තමා ගේ ප්‍රායෝගික පුහුණුවෙන් ජීවත් වෙන්නට පුළුවන්කම තිබෙනවා. අද අපේ අධ්‍යාපන ක්ෂේත්‍රයට එය අප ඇතුළු කරගෙන යනවා. ඒ නිසා මෙ වැනි කරුණු ගැන කල්පනා කරලා බලලා කාගෙත් අදහස් උදහස් විමසලා මේ වැඩපිළිවෙළවල් සකස් කිරීමට දීර්ඝ කාලයක් තිස්සේ අපට අත්‍යවශ්‍ය ව තිබුණු ජාතික අධ්‍යාපන කොමිෂම දැන් අප පත්කරලා තිබෙනවා. එහෙම නැත්නම් වාරයෙන් වාරයේ දී එක් එක් කෙනා ගේ හිතුමතයට මේ වැඩපිළිවෙළවල් වෙනස් කිරීම නිසා අධ්‍යාපනය කිසිම අරමුණක් නැතිව ගමන් කරන ව්‍යායාමයක් බවට පත් වෙනවා. ඒ වගේම මහා වියදම් සහිත වැඩපිළිවෙළක් බවට පත් වෙනවා. ඒ නිසා මා සන්තෝෂ වෙනවා ඒ පැහැදිලි වැඩපිළිවෙළක් ක්‍රියාත්මක කරන්න අපේ විද්වතුන්ගෙන් යුක්ත ජාතික අධ්‍යාපන කොමිෂමක් අපට පත් කරන්නට පුළුවන් වීම ගැන.

ඇත්ත වශයෙන්ම කල්පනා කලොත් සාමාන්‍ය අධ්‍යාපන ක්ෂේත්‍රයේ දැනුම ගැන කල්පනා කර බැලුවොත්, අකුරු කියවීමේ ඒ මූලික හැකියාව අතින් අපේ දියුණු රටවල් අතර ඉහළම තත්ත්වයෙන් සිටින බව මට කියන්න පුළුවන්.

### නිදහස් අධ්‍යාපනයේ වරප්‍රසාදය

1946 අපට තිබුණේ ඒ දැනුම ජනගහණයෙන් 57%කට පමණ යි. සී. ඩබ්ලිව්. ඩබ්ලිව්. කන්නන්ගර අමාත්‍යතුමාගේ සහ එවකට අපේ රටේ රාජ්‍ය මන්ත්‍රණ සභාවේ කටයුතු කළ නායකයන්ගේ බුද්ධිමත් ක්‍රියාදාමය නිසා නිදහස් අධ්‍යාපනයෙන් අපට ලොකු වරප්‍රසාදයක්. අද තත්ත්වය 87% යි. ජනගහණයෙන් 87%ක ඒ ඉගෙනීම ලබාගත් ප්‍රමාණය වැඩිදියුණු වී තිබෙනවා. ඉස්සර අප දෙ වැනි තත්ත්වයක හිටිය නමුත් දැන් ඒ තත්ත්වයට දකුණු කොරියාව පත් වී තිබෙනවා. නමුත් දැන් අපි පුළුවන් තරම් රුකුල් දෙන්නේ නොමිලේ පොත්පත් දෙන්න. දිවා ආහාරය නොමිලේ දෙන්න. එය ආර්ථික අතින් අමාරුකම් තියෙන දෙමවුපියන්ට පවා තමන් ගේ දූ දරුවන්ට ඉගැන්වීමට පෙළඹවීම යි. ප්‍රාථමික ද්විතීය පාසල් 46 දී තිබුණේ 5000යි. අද තිබෙනවා 10,000ක් පමණ. අපේ ජනගහණයෙන් 25%ක් ම ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් 1989 දී මුළු ශිෂ්‍ය ජනගහණය ලක්ෂ 42යි. අද ගුරුවරු අපට ඉන්නවා 1,84,000ක්. මට මතකයි, ඊරියගොල්ල මහතා අධ්‍යාපන ඇමති කාලේ කියනවා, ගුරු සංඛ්‍යාව ගැන ඇහුවම 84,000ක් ධර්මස්කන්ධය වාගේ ගුරුවරු 84,000ක් ඉන්නවා කියා. නමුත් අද 1,84,000යි. ජනගහණයෙන් 1600කට එක පාසල බැගින් තියෙනවා. 1988 ඒ ප්‍රමාණය 2.58%යි. අද 1991 වර්ෂයේ ඒ ප්‍රමාණය වැඩිවී තිබෙනවා 2.99% දක්වා.

### පළාත් නවයට ම විශ්ව විද්‍යාලය නවයක්

පළාත් නවයට නව විශ්ව විද්‍යාල නවයක් අප පිහිටුවනවා. මෙ අවුරුද්ද අවසාන වෙන්න ඉස්සර වෙලා. මේ ඉදිරි අවුරුදු 4 අවසාන වෙන්න ඉස්සර වෙලා හැම දිස්ත්‍රික්කයක ම එක විශ්ව විද්‍යාලය බැගින් පිහිටුවනවා. මේ විශ්ව විද්‍යාල දැනට තිබෙන විද්‍යාලවලට අනුබද්ධ කරන්න ඕනෑ. ඒ විද්‍යාලවල අධ්‍යාපන තත්ත්වයත් ඒ විද්‍යාලවල

විභාගවලට පෙනී සිටීමත් මේ විද්‍යාලවලින් කෙරෙන්නේ. මේ අවුරුද්ද අවසාන වෙන්න ඉස්සර වෙලා පිහිටුවන අනුබද්ධ විශ්ව විද්‍යාල නවයක් මේ අවුරුදු 4 ඉවර වෙන්න ඉස්සර වෙලා පිහිටුවන අනුබද්ධ විශ්ව විද්‍යාල 25ත්—දිස්ත්‍රික්කයකට එක ගානේ. ඒවායින් කරන්නේ අපේ දරුවන් සූදානම් කරනවා—කුමක් සඳහා ද? අපේ අද තිබෙන මූලික විශ්ව විද්‍යාල හතට අනුබද්ධ කරලා ඒ පාඩම් මාලාවල්වලින් ඒ මඟින් ඒ විභාගවලට ඒ තත්ත්වයේම උපාධි ලබාගැනීමට. එහෙම නැතිව මේ විශ්ව විද්‍යාලවලින් බාල උපාධි දෙන්නට නොවන බව මම අවධාරණයෙන් ප්‍රකාශ කරන්න කැමතියි.

අද තිබෙන විශ්ව විද්‍යාලවලට අද අපේක්ෂා කරන සංඛ්‍යාව ඇතුළු කරගන්න අමාරු වෙලා තියෙනවා. විශ්ව විද්‍යාල පිහිටෙව්වත් නේවාසික පහසුකම් දීම අමාරු වෙලා තියෙනවා. අප කල්පනා කරනවා—අපේ රජය කල්පනා කරනවා. ලංකාව පූර්ණ විශ්ව විද්‍යාල 25ක් ඇති කළොත් තමන් ගේ ගෙවල් දොරවල්වල ඉඳලා හරි අපේ ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ට ඒ විශ්ව විද්‍යාල 25ට ගිහිල්ලා අර අපේ මූලික විශ්ව විද්‍යාලවල පාඩම්මාලාවල්ම හදලා ඒ උපාධි ඒ තත්ත්වයෙන්ම ලබාගැනීමට ඔවුන් සූදානම් කරන්න. ඒක මේ රටේ කෙරුණා.

පූර්ණ විශ්ව විද්‍යාල තත්ත්වයක් ඇති වෙන්න ඉස්සර වෙලා කළම්බු යුනිවර්සිටි කොලේජ් එක මේ රටේ තිබුණා. අද අපේ ප්‍රවීණ උපාධිධාරීන් කවුරුත් ඒ යුනිවර්සිටි කොලේජ් එකට ගිහිල්ලා එංගලන්තයේ ඔක්ස්ෆර්ඩ් කේම්බ්‍රිජ් විභාගවලට සූදානම් වුණේ—ලන්ඩන් විශ්ව විද්‍යාලය, කේම්බ්‍රිජ් විශ්ව විද්‍යාලය—ඔක්ස්ෆර්ඩ් විශ්ව විද්‍යාලය සහ වෙනත් විශ්ව විද්‍යාලවල පාඩම්—පාඨමාලාවලට ගැළපෙන ඉගැන්වීමක් ලබලා—විභාගයට පෙනී සිටියා. ප්‍රශ්න පත්තර එහේ ඉඳලා මෙහාට ආවා. ඒවාට උත්තර ලිව්වා. ඒවා එහාට ඇරියා—ඒ විශ්ව විද්‍යාලයවල නේවාසික ශිෂ්‍යයන් ලබන්නාවූ උපාධියම ලැබුණා. ඒක තමයි ඒ දවස්වල කිව්වේ. බී. ඒ. (ලන්ඩන්) කියලා—ලන්ඩන් විශ්ව විද්‍යාලයෙන් බී.ඒ. විභාගය සමර්ථ වුණු අය ලබා ගත්තා. ඒ වගේ අපේ අර විශ්ව විද්‍යාලය එද අනුබද්ධ විශ්ව විද්‍යාලයක්. ඒ විශ්ව විද්‍යාලය තමයි පූර්ණ විශ්ව විද්‍යාලයක් හැටියට පේරාදෙණියේ පිහිටෙව්වේ. මෙහෙම උපාධි දෙන්න. ඒ අනුව තවත් විශ්ව විද්‍යාල හතක් පිහිටෙව්වා. දැන් හදන්නේ අර එද තිබුණු විදියේ යුනිවර්සිටි කොලේජ් නොහොත් අනුබද්ධ විශ්ව විද්‍යාල—

මේ පිහිටුවන විශ්ව විද්‍යාල 25 අපේ පූර්ණ විශ්ව විද්‍යාලවලට අප අනුබද්ධ කරනවා. අනුබද්ධ කරලා ඒ පාඨමාලාවල් ම හදරලා ඒ විභාගවලට පෙනී ඉදලා ඒ උපාධිය ලබා ගැනීමට ඒ තත්ත්වයෙන්ම වැඩපිළිවෙළ ගෙන ඇත්තේ කුමක් සඳහා ද? අපේ මේ උසස් විද්‍යාලවලින් බිහිවන අපේ දරුදැරියන් වේගවත් ව තමන්ගේ නිපුණත්වය ලබා ගන්නවා.

එහෙම නැත්නම් බලන්න, කොයිතරම් දෙනකු විශ්ව විද්‍යාලවලට ඇතුළු වෙන්න බැරුව අසරණ වෙනවා. අප දැනටමත් වෙන් කරලා තිබෙනවා, මේ අවුරුද්ද අන්තිම වෙන්න ඉස්සර වෙලා පිහිටුවන විශ්ව විද්‍යාල 9ට රුපියල් කෝටි 300ක්. දැනට සේවයේ ඉන්න 1,84,000 ගුරුවරුන් ගෙන් පුහුණු ගුරුවරු ඉන්නේ 57%යි. එය ඉතා අසතුටුදායක තත්ත්වයක්. අද විද්‍යා පීඨ ගණනාවක් පිහිටුවලා. පුහුණු කිරීම වේගවත් කරගෙන යනවා. එහෙම නැත්නම් අද තිබෙන ගුරු පුහුණු විද්‍යායතන එක් කොට යොදාගත්තත් අපට පුහුණු කරන්න පුළුවන් වෙන්නේ 28,000ක් පමණක්. අවුරුදු 10ක් යනවා ඒකටත්. ඒකත් වේගවත් කරමු.

දැන් වාර්ෂික ව උපාධිධාරීන් 1200ක් ගුරු සේවයට ඇතුළු වෙනවා. ඉදිරි අවුරුදු 10 තුළ දී ගුරුවරුන් 12,000ක් අලුතෙන් සේවයට එක් වෙනවා. ගුරු පුහුණුව වේගවත් කිරීමට ඒ නිසා අප දැන් වැඩපිළිවෙළවල් යොදා ගෙන යනවා. ඒ නිසා මා බොහොම සතුටු වෙනවා තමුත්තාත්සේලාගේ විද්‍යාලයේ 105 වැනි වර්ෂයේ අද මේ ත්‍යාග ප්‍රදානෝත්සවයට සහභාගීවීමට පුළුවන් වීම ගැන. මා මෙහි දී කළේ මේ ආනන්ද විද්‍යාලය ආරම්භ කරන්න පුරෝගාමී වූ අපේ ශ්‍රේෂ්ඨ වීරවරයන් ගේ පරමාර්ථ ටිකක් මතක් කර දීම යි.

මේ ධර්ම විද්‍යාල පිහිටුවීමෙන් බලාපොරොත්තු වුණු පරමාර්ථය මොකක් ද කියලා දැන් අප දන්නවා. මෙය විද්‍යාල ඇති කරන්නන් වාලේ ඇති කළ විද්‍යාලයක් නො වෙයි. වෙන විදුහල්හි නැති වෙසෙසක් — වෙනසක් මේ විද්‍යාලයේ සිසු දරුවන් තුළ ඇති කිරීම තමයි පරමාර්ථය. අපට පේනවා ආනන්ද විද්‍යාලයේ දැනුම සහ පුහුණුව ලබාගත් ශ්‍රේෂ්ඨ ලංකා පුත්‍රයන් ලංකාවේ නොයෙක් ක්ෂේත්‍රවල මූලිකත්වයට පත් වෙනවා. අප ඒ සේවාව හැම විට ම අගය කරනවා. එහෙත් මට මතක් කර දෙන්න

වුවමනා කරන්නේ මේ ආරම්භ කළ මූලික පරමාර්ථ අමතක වීමට ඉඩකඩක් දෙන්න එපා ය කියන පණිවිඩය යි. ආනන්ද විද්‍යාලයේ ශිෂ්‍යයන්ගේ හැදියාවේ විශිෂ්ටත්වයක් හැම විට ම ඉස්මතු වී පෙනෙන්නට වුවමනා කරනවා. එය එසේ ම වේ වා කියා ප්‍රාර්ථනා කරමින් මගේ කතාව මෙයින් සමාප්ත කරනවා.

## கொழும்பு ஆனந்த மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற வருடாந்தப் பரிசளிப்பு விழாவின்போது அதிமேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆற்றிய உரை — 1991.07.19

ஆனந்த மகா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 105 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளனவென்று கல்லூரி அதிபர் என்னிடம் தெரிவித்தார். எனவே மிக நீண்ட சரித்திரம் உங்கள் கல்லூரிக்கு உண்டு. உங்கள் கல்லூரி சரித்திரப் புகழ்பெற்ற கல்லூரியாகும். இந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதியினையும் இக்கல்லூரியை ஆரம் பிக்க ஏதுவான காரணங்களையும் இக் கல்லூரியினை ஆரம்பித்த சான்றோர்களையும் உற்றுநோக்குமிடத்து உங்கள் கல்லூரிக்கு அக்காரணங்களால் மங்காப்புகழ் கிடைத்துள்ளதெனலாம்.

இத்தகைய கல்லூரியொன்றின் தேவையானது பலரால் உணரப்பட்ட ஒரு காலம் இருந்தது. வெகு நீண்டகாலம் அந்நிய ஆதிக்கத்தின்கீழ் எமது நாடு இருந்து வந்தது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிகளுக்குப் பின்னர் சுமார் 150 ஆண்டுகள்வரை எமது நாடு ஆங்கிலேயர்களது ஆதிக்கத்தின் கீழ் நிருவகிக்கப்பட்டு வந்தது. இக் காலப்பகுதியில் பிறந்த சிறப்பு மிக்க தேசப்பற்றாளர்களது அனுபவங்கள் பிற்றைய காலத்தில் இத்தகைய கல்லூரியொன்றைத் தாபிப்பதற்கு வழிகோலின.

### யுகத்தின் தேவை

அந்நிய நாட்டவர்களது ஆதிக்கத்தின்கீழ் நாங்கள் வாழ்ந்த காலத்தில் எமது நாட்டு தேசிய மாண்புகள் மிகப் பரிதாபகரமான நிலையில் சீரழியத் தொடங்கின. ஒரு தேசிய இனம் என்ற வகையில் நாங்கள் கடைப்பிடித்து வந்த உறுதிப்பொருள்கள் எம்மைவிட்டுப் பிரிந்து சென்றன. அந்தத் தேசியச் சீர்கேடு உச்ச நிலைக்கு வந்திருந்த பொழுதுதான் மொகொட்டிவத்தை குனாநந்ததேரர், ஹிக்கடுவை சிறி சுமங்கள நாயக்கதேரர் ஆகிய சான்றோர்கள் நாட்டு மக்கள் மத்தியில்

விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முன்வந்தனர். துறவறம் பூண்டிருந்த அச்சான்றோர்களின் முயற்சி காரணமாக வெளிநாட்டவர்களும் எமது நாட்டைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

அத்தகைய வெளிநாட்டுச் சான்றோர்களில் ஒருவர்தான் என்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள். அவர் அமெரிக்க நாட்டில் பிறந்தவர். புத்த தருமம் பற்றிய அக்கறை கொண்டிருந்த அவர் அக்காலத்தில் எமது நாட்டில் இடம்பெற்ற சமய விவாதமொன்றின் தகவல்களைக் கேட்டறிந்து இந்நாட்டுக்கு விஜயம் செய்தார். அவருக்கு ஹிக்கடுவை சிறி சுமங்கள நாயக்கதேரரின் பழக்கம் ஏற்பட்டது. அக் காலத்தில் இளம் சமூக சேவையாளராகப் பணிபுரிந்த பெரியார் அனகாரிக்க தர்மபால அவர்கள் அக் காலத்தில் இலங்கை மக்கள் கொண்டிருந்த அடிமை மனப்பான்மையை வெகுவாகக் கண்டிக்கத் தொடங்கினார். அந்த முயற்சியின் பயனாகத்தான் ஆனந்த கல்லூரி தாபிக்கப்பட்டது.

ஆனந்த கல்லூரியைப் போன்ற கல்லூரியொன்று ஏன் எமது நாட்டுக்குத் தேவைப்பட்டிருந்தது ? நமது நாட்டு மக்கள் கடைப் பிடித்துவந்த உறுதிப் பொருள்களைத் தொடர்ந்து பேணக்கூடிய சந்ததியொன்றை உருவாக்கும் தேவை பலரால் உணரப்பட்டிருந்த மையாகும். சுமார் 150 வருடங்களைக் கொண்ட ஆங்கிலேயர்களது ஆட்சிக் காலத்தில் எமது நாட்டு மக்கள் பாரிய சீர்குலைவுக்கு ஆளாகி யிருந்தனர். பொருளாதாரமும் சீர்குலைந்திருந்தது. எங்கள் நாட்டுக்கே சிறப்பான வேளாண்மைத் துறைகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. மக்கள் ஆன்மீக வளர்ச்சியற்ற நிலையில் இருந்தனர். அந்நிய நாட்டவர்கள் எமது உறுதிப்பொருள்களைப் படிப்படியாக அழிப்பதன்மூலம் இந் நாட்டினையும் இந்நாட்டு மக்களையும் அடிமைப்படுத்திக் கொண்டனர். மக்கள் மத்தியில் அடிமை மனப்பான்மையினை வளர்த்தனர். அங்ஙனம் செய்யாவிடின் நாடொன்றை அடிமை நாடாக வைத்துக்கொள்வது கடினமாகவிருக்கலாம்.

ஆங்கிலத் தேசாதிபதிகள் எழுதி அனுப்பிய குறிப்புகள் இன்றும் அழியாமல் உள்ளன. அக்குறிப்புகள் ஒன்றில் பின்வருமாறு எழுதப் பட்டுள்ளது :— " இலங்கையினை எளிதில் நிருவகிக்க வேண்டு மென்றால் அந்நாட்டு மக்கள் கடைப்பிடித்துவருகின்ற உறுதிப்பொருள் களையும் பண்புகளையும் அழித்தொழித்தல் வேண்டும். " அந்தக் குறிப்பு எழுதப்பட்ட அதே மையால் அந்த ஆவணம் இன்றும் இலண்டன் நூதனசாலையில் பேணிக்காக்கப்பட்டு வருகின்றது.

அத்தகைய அடிமை மனப்பான்மையிலிருந்து எமது பாரம்பரியத்தை மீட்பதற்குத்தான் ஆனந்தக் கல்லூரியினைப் போன்ற பல கல்லூரிகளைப் பரமஞான பௌத்த சங்கம் நிறுவியது. இப்பணிக்காக ஒல்கொட் அவர்கள் விசேட ஒத்துழைப்பினை நல்கினார். அப்பொழுது எமது நாட்டைச் சேர்ந்த சான்றோர்கள் சிலர் இங்கிலாந்துக்குச் சென்று கல்விகற்றுக் கொண்டிருந்தார்கள். அச்சான்றோர்கள் சிறு வயதிலேயே பெற்றோர்களின் வழிநடத்துதலின் கீழ் சீரிய பண்பாளர்களாக இருந்தவர்களாவர். மாண்புமிக்க பாரொன் ஜயதிலக்கா, கலாநிதி பீ. த எஸ். குலரத்தின, பேராசிரியர் குணபால மலலசேகர ஆகிய சான்றோர்கள் இந்த முயற்சியின் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர். ஆனந்தக் கல்லூரிக்கு தொண்டாற்றியவர்கள் பலரேயாவர். ஆனந்தக் கல்லூரியின் தற்போதைய மாணவர்கள் அந்த வரலாற்றினைப் படிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனந்தக் கல்லூரியில் கல்வியினைப் பெறாமல் கத்தோலிக்க மதகுருமார்களால் நடாத்தப்பட்ட புனித ஜோசப் கல்லூரியில் கல்விகற்ற எனக்கு அந்த வரலாறு பற்றி நன்றாகத் தெரியும். என்னைவிட ஆனந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணாக்கர் அனைவரும் அப்புகழ்மிக்க வரலாற்றினைப் படித்துள்ளனர் என்று நான் நினைக்கின்றேன்.

அங்ஙனமாயின் நான் ஒரு வினாவினை எழுப்ப விரும்புகின்றேன். நாட்டு மக்களது பண உதவியினால் இடர்கள் பலவற்றுக்கு மத்தியில் நிறுவப்பட்ட ஆனந்த, நாலந்த, தர்மராஜ, மஹிந்த ஆகிய கல்லூரிகள் அந்தச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நோக்கங்களை எய்தும் பொருட்டு இன்று சேவையாற்றுகின்றனவா ? என்ற கேள்வியைத்தான் நான் எழுப்புகின்றேன்.

பொதுக் கல்வியுடன் மொழிகளையும், கணிதங்களையும், கலைகளையும், விஞ்ஞானத் தொழிநுட்பப் பாடங்களையும் நாங்கள் கற்கவேண்டியது உண்மையாகும். அவற்றைப் ப்டிப்பது மட்டுமன்றி ஆனந்த கல்லூரியைப் போன்ற கல்லூரிகளில் புகட்டப்பட வேண்டிய ஏனைய உயர்ந்த நோக்கங்களும் இருக்கின்றன. அந்த நோக்கங்களைப் புகட்டுவதற்கான ஏற்பாடுகளும் இக் கல்லூரியில் நிறைய இருக்கின்றன. மனிதனாகப் பிறந்த ஒருவர் தமக்கும், சமூகத்தில் வாழுகின்ற ஏனையோருக்கும் இடர்கள் ஏற்படாதவாறு தமது வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ளுதல், நன்நடத்தை கொண்டிருத்தல், தமக்கும் பிறருக்கும் தீங்கு ஏற்படாதவாறு உயரிய கோட்பாடுகளைக் கடைப்பிடித்தல் என்பன சிறிய வயதில் இருந்தே எமது சிறார்களுக்குச் சொல்லிக் கொடுத்தல் அந்த சீரிய நோக்கமாகும். இவற்றைப் புகட்டுவது



5 –

மட்டுமன்றி அவற்றைக் கற்றறிந்து நடந்து கொள்வதனால் சமூகத்திற்கு ஏற்படும். நன்மைகளைப் பற்றிய செய்முறைப் பயிற்சியொன்றினையும் அளிப்பது அவசியம் என்று இந்த ஆனந்தக் கல்லூரியினை ஆரம்பித்த முன்னோடிகளின் நோக்கமாக இருந்தது.

தமக்கும் பிறருக்கும் இடரின்றி வாழக்கூடிய முறையொன்றைக் கற்பிப்பதற்காக இத்தகைய கல்லூரிகள் அக்காலத்தில் தேவைப்பட்டன. அந்தத் தேவையானது தற்காலத்திலும் உள்ளது. சின்னஞ் சிறிய வயதில் தம்மைச் சீராட்டிப் பாராட்டி வளர்க்கின்ற பெற்றோரையும், தமக்குக் கல்வி புகட்டுகின்ற ஆசிரியர்களையும், தம்மை உபசரித்து வளர்க்கின்ற உற்றார் உறவினர்களையும் போற்றுவதற்கும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளவும் சிறார்களுக்குக் கற்பித்தல் வேண்டும். " அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் " என்ற உணர்ச்சி சிறுவயதிலேயே சிறார்களின் உள்ளத்தில் பதிய வைக்கப்படுதல் வேண்டும்.

இதற்கெனப் பலவழிகளைக் கையாளலாம். நாடோறும் கடவுளை வணங்கவும் அதன்பின்னர் அன்னைக்கும் பிதாவுக்கும் வந்தனை செய்யவும் பழகிக்கொள்ளுதல் வேண்டும். தன்னைப் பத்து மாதம் சுமந்து ஈன்றவளும் இரத்தத்தைப் பாலாக மாற்றி ஊட்டியவளுமான ஆருயிர் அன்னை தமக்குச் செய்த பேர் உபகாரத்தை மறந்து விடலாகாது. வியர்வை சிந்தியும் பல இன்னல்களுக்கு மத்தியிலும் எங்களைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த ஆருயிர் தந்தைக்கு நாங்கள் நன்றிக் கடன் செலுத்துதல் வேண்டும். எமது அறிவினை வளர்ப்பதற்கு பலவாறு உழைத்துவருகின்ற பெரியோர்களையும், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் போற்றும் மனப்பான்மையானது சிறுவயதிலிருந்தே பிள்ளைகளிடத்தில் வளர்க்கப்படுதல் வேண்டும்.

சிறிய வயதில் பிள்ளைகளுக்குத் தமது பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் மதிக்க வேண்டுமென்ற சிறிதேனும் அறிவு இல்லாதபடியால் அவர்களுக்கு நாங்கள் வழிகாட்டுதல் வேண்டும். எமது முன்னோர்கள் சிறுவர்களை நல்வழிப்படுத்தத் துணைபுரியும் சிறிய நூல்களை மிக எளிய மொழிநடையில் எழுதியுள்ளனர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னெறிக்கோவை ஆகிய சிறிய ஏடுகளின்மூலம் சிறார்களது மனதைப் பக்குவப்படுத்துவதற்கு ஆற்றிய தொண்டுபற்றி ஆய்வினை மேற்கொள்வது சாலச்சிறந்ததாகும். சிங்கள மொழியிலும் " சிறித் மல்தம " போன்ற நூல்கள் சிறுவர்களுக்காக

எழுதப்பட்டுள்ளன. அந்தச் சிறிய நூல் மிகவும் சரளமான மொழிநடையிலும், எளிய செய்யுள் நடையிலும் எழுதப்பட்டுள்ளது. அதனை வாசிக்கும் சிறார்களது உள்ளங்கள் மட்டுமன்றி பெரியோர்களது உள்ளங்களும் புளகாங்கிதமடைகின்றன.

அதனை அடுத்து உலக இயல்பினைப் புரிந்து கொள்ளத் துணைபுரிகின்ற " லோவெட சங்கராவ ", " சுபாசிதய " முதலியவற்றைப் போன்ற நூல்களையும் சிறார்களுக்குக் கற்பித்தல் வேண்டும். அந்நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகள், உவமேயங்கள் என்பன மூலம் சமூகத்தின் உண்மையான நிலை தெளிவாகின்றது. இவை மூடநம்பிக்கையின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்கள் அல்ல. அறிவினைப் புகட்டுவதற்காக எழுதப்பட்ட நூல்களாகும். " சுபாசிதய " என்னும் நூலினை வாசிக்குமிடத்து அதில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகளின் வாயிலாக உலக இயல்பு எவ்வளவு சிறப்பாகப் புகட்டப்பட்டுள்ளதென்பது தெளிவாகின்றது. ஏனைய நூல்களைப்பற்றி எடுத்துரைப்பதற்கு நான் இத்தருணத்தில் எண்ணமாட்டேன். எமது மக்களிடையில் வளர்ந்து வந்த அடிமை மனப்பான்மையினை மாற்றிச் சுதந்திர தாகம் கொண்ட உணர்ச்சிகளை ஏற்படுத்துவதற்கும் தமக்கும் பிறருக்கும் இடர் இன்றி வாழக்கூடிய அறிவினைப் புகட்டுவதற்கும் எமது முன்னோர்கள் இந்நூல்களின் மூலம் எடுத்த முயற்சியினை சுட்டிக் காட்டுவதற்குத்தான் நான் இதனை எடுத்துக்காட்டினேன்.

அன்று டவர் ஹோல் நாடக மண்டபத்தைக் கட்டியெழுப்புவதற்காக செனெவிரத்தின குடும்பத்துக்குத் தூண்டுதல் அளித்தவர் பெரியார் அநகாரிக தர்மபாலர் ஆவார். அவர்தான் டவர் ஹோல் நாடக மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டினார். சட்டவறிஞர் ஜோன் த சில்வா, சட்டவறிஞர் சார்ள்ஸ் டயஸ் எனப் பெயரிய புகழ்பெற்ற கலை விற்பன்னர்கள் இருவர் நாட்டுப்பற்றினை மக்களிடையில் தட்டியெழுப் பும் நோக்கில் பல்வேறு நாடகங்களை எழுதி அரங்கேற்றினார்கள். அந்த நாடகங்கள் ஜாதகக் கதைகளை மட்டுமன்றி சமுதாய விடயங்களையும் பொருளாகக் கொண்டு எழுதப்பட்டிருந்தன. அந்நாடகங்கள் யாவும் அக்காலத்தில் எமது நாட்டில் நிலவிய அடிமை மனப்பான்மையினை அகற்றுவதன் நோக்கில் எழுதப்பட்டனவாகும்.

இப்பொழுது உள்நாட்டுக் கல்வித்துறையிலும் அனைத்துலகக் கல்வித்துறையிலும் மொழி அறிவினையும் விஞ்ஞான அறிவினையும்

நுண்கலை அறிவினையும், தொழினுட்ப அறிவினையும் புகட்டுவதற்கு ஒரு சீரான பாடவிதானங்களை அனுசரித்து வருகின்றனர். விஞ்ஞான அறிவு மட்டுமன்றி ஒழுக்கநெறி அறிவும் மனிதர்களுக்கு இன்றியமை யாததாகும். எவ்விடயத்துக்கும் இது பொதுவான உண்மையாகும். தாம் மேற்கொள்ளுகின்ற நடவடிக்கை யுக்தியின் பாற்பட்டதாவெனவும் அதனால் தமக்கும், சமூகத்துக்கும் அநீதி அல்லது குற்றம் விளைவிப்பதாவெனவும் அலசி ஆராய்ந்து பார்க்கக்கூடிய குணநலமிக்க சிறுவர் — சிறுமியரை உருவாக்கும் உயர்ந்த நோக்கம்தான் இத்தகைய கல்லூரிகளைத் தாபிப்பதற்குக் காரணமாய் இருந்தது.

ஆரம்ப நோக்கங்கள் .

கிறித்தவ மிஷநாரிமார்கள் எமது நாட்டுக்கு வந்து பாடசாலைகளை ஆரம்பித்ததைக் கண்டு பௌத்தர்களாகிய நாங்களும் பாடசாலைகளை நிறுவ வேண்டுமென்ற எண்ணத்தில் பௌத்த பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை நாங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். உரிய நேரத்தில் பஞ்சசீலம் அனுஷ்டிப்பதன் மூலம் வெறுமனே பௌத்த மத பாடசாலை என்ற பெயரில் பாடசாலைகளை நடாத்துவதற்கு எமது முன்னோர்கள் கருதவில்லை. பொதுக் கல்விமுறையின் கீழ் அன்று பெற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்த குணநலன்களைப் படிப்பிக்கும் கல்வி நிலையமாகவே இந்த ஆனந்தக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. உண்மையில் இது முதன்முதல் ஞாயிற்றுக்கிழமை தம்ம பாடசாலையாகவே அவர்கள் ஆரம்பித்தனர். அந்த ஆரம்பப் பாடசாலை புறக்கோட்டையில் மலிபன் வீதியில்தான் நிறுவப்படலாயிற்று.

" தற்போதைக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கல்வி புகட்டுவதை ஆரம்பிப்போம். நன்நடத்தைகளைப் படிப்பிக்கக்கூடிய பாடசாலையொன்றை அரசாங்கத்தின் கல்விப்பாட விதானத்துக்கமைய பின்னர் தாபிப்போம். பரீட்சைகளில் சித்தி எய்துவதற்கான அறிவினைப் புகட்டும் அதே நேரத்தில் எமது சிறார்களுக்கு நன்னெறியினைக் கற்பிப்பதற்கும் அவர்கள் சுதந்திரமாக நினைப் பதற்கும், அவர்கள் மனதிலும் அவர்களுடைய பெற்றோர்கள் மனதிலும் ஏற்பட்டுள்ள அடிமை மனப்பான்மையினை நீக்குவதற்கும் இக் கல்வித் திட்டத்தினை ஆரம்பிப்போம் " என்று கூறித்தான் அக் காலத்துச் சான்றோர்கள் இந்தக் கல்லூரியை ஆரம்பித்தார்கள்.

இக்கல்லூரியில் ஒல்கொட் அவர்களது படம் தொங்கவிடப்பட்டிருந்தது. இக்கல்லூரி நிறுவப்பட்ட காலத்திலிருந்து சேவையாற்றிய கல்லூரி அதிபர்களது படங்களும் தொங்கவிடப்பட்டிருந்தன. இன்று அந்தப் படங்கள் இல்லையெனத் தெரிகின்றது. அந்தப் படங்களை யாவராலும் காணக்கூடியவிதத்தில் தொங்கவிடப்பட்டிருப்பது அவசியமாகும். இக்கல்லூரியின் வளர்ச் சிக்காக சிங்கள அறிஞர்கள் மட்டுமன்றி எமது நாட்டு உறுதிப்பொருள்களை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கல்லூரி அதிபர்களும் ஆனந்தக் கல்லூரியில் சேவை புரிந்துள்ளனர். எனவே, இக் கல்லூரியானது இனரீதியாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியல்ல. முழு உலகிற்கும் நன்மை பயக்கும் தார்மீகக் கல்வி அறிவினையும், தார்மீக வாழ்வு வாழத் தேவைப்படுகின்ற அறிவினையும், பயிற்சியையும் பெற்ற கல்லூரி அதிபர்கள் இங்கு சேவை புரிந்துள்ளனர். இலங்கை பர்கர் இனத்தைச் சேர்ந்த புல்ஜன்ஸ் அவர்களைப் போன்ற கல்லூரி அதிபர்களும் இக் கல்லூரியின் குறிக்கோள்களை ஏற்றுக் கொண்டிருந்தனர். திருவாளர் சிவகுருநாதன் அவர்களைப் போன்ற தமிழ் இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும், ஜனாப் ரி. பி. ஜாயா அவர்களைப் போன்ற முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் ஆனந்தக் கல்லூரிக்குப் பெரும் புகழைத் தேடித் தந்துள்ளனர்.

### சீரழிவுக்கு எதிரான பணி

எங்கள் இளந்தலைமுறையினர் ஆன்மீகச் சக்தியுடையவர்களாகத் திகழ வேண்டும். வாழ்க்கைப் பயணத்தின்போது எத்தகைய நெருக் கடியினையும் பயமின்றியும் தயங்காதும் சமாளித்துக் கொள்ளக்கூடிய ஆன்மீகச் சக்தியுடையவர்களாகத் திகழ வேண்டும். சத்தியத்துக்கும் யுக்திக்கும் தலைவணங்குகின்ற, அநீதிக்கும் அநியாயத்துக்கும் இடமளிக்காத, சுயநலம் கருதாமல் செயல்படக்கூடிய இளந்தலை முறையினரை நாங்கள் உருவாக்குதல் வேண்டும் என்ற எண்ணம் அக்காலத்தில் மேலோங்கி நின்றது. காரணம், அக்குடியேற்ற நாட்டுக் காலத்தில் எமது உறுதிப்பொருள்கள் யாவற்றுக்கும் தீங்கு விளைவிக்கின்ற வகையில் எமது மக்களை உடலியல் ரீதியாக மட்டுமன்றி உளவியல் ரீதியாகவும் அடிமைப்படுத்திய பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. எம்மை ஆண்டவர்கள் பகுத்தறிவற்ற நிலையில் எமது நாட்டுக்குத் தேவைப்படாத பழக்க வழக்கங்களைப் பயிற்றுவிக்கத் தொடங்கினார்கள். அதனால், ஆன்மீகச்

சீரழிவுமட்டுமன்றி பொருளாதாரச் சீரழிவும் ஏற்பட்டது. ஐரோப்பாவுக்கு இசைவான முறையில் கீழ் நாட்டவர்களாகிய நாங்கள் வாழத்தொடங்கினோம். அவர்களுடைய உணவுப் பழக்கங்களையும் நடை உடை பாணிகளையும் நாங்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்றத் தொடங்கினோம். எனவே நாங்கள் ஆன்மீகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் அவர்களுடைய கிங்கரர்களாக வாழவேண்டிய சூழல் ஏற்பட்டது. அத்தகைய சீரழிவிலிருந்து எமது நாட்டைப் பாதுகாப்பதற்குத்தான் ஆனந்தக் கல்லூரி நிறுவப்படலாயிற்று.

ஆனந்தாக் கல்லூரி மாணவர்களை அடையாளம் காணுதல்

ஆனந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அல்லது தற்போதைய மாணவர்கள் என்று எங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதில் நாங்கள் பெருமைப்படுகின்றோம். ஏனைய கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எங்களுக்குமிடையில் ஒரு வித்தியாசம் உள்ளதென்பதை எங்ஙனம் கண்டுபிடிக்க முடியும். கழுத்துப்பட்டியினைக் கொண்டு கண்டுபிடிக்க முடியுமா ? இத்தகைய கழுத்துப் பட்டிகள் ஏனைய பாடசாலைகளிலும் பாவிக்கப்படுகின்றன. உடையினைக் கொண்டு கண்டுபிடிக்க முடியுமா ? இத்தகைய உடைகள் ஏனைய பாடசாலைகளிலும் அணியப்படுகின்றன. உங்கள் கல்லூரிக்கே சொந்தமான வர்ணம் இல்லாமல் மாணவரொருவர் வீதியில் இறங்கினால், அவர் புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்தவரா அல்லது சாஹிராக் கல்லூரியைச் சேர்ந்தவரா அல்லது ஆனந்தக் கல்லூரியைச் சேர்ந்தவரா அல்லது வெஸ்லிக் கல்லூரியைச் சேர்ந்தவரா என்று எவ்வாறு அறிந்து கொள்ள முடியும். அவரைக் கேட்டுத்தான் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று இங்குள்ள மாணவர்கள் ஒரு கேள்வியைக் கேட்கலாம்.

வீதியில் செல்லும்போதும், ஓர் இடத்தில் தங்கியிருக்கும்போதும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்போதும், தமக்கும் பிறருக்கும் இடர் இல்லாதவாறு நடந்துகொள்பவனே ஆனந்தக் கல்லூரியின் மாணவனாவான். எமது மாணவர்கள் வீதியில் செல்லும்பொழுது எமக்கு வியப்பைத் தருகின்றது. ஒரு மாணவர் கூட்டம் ஒரு விதமாகவும், இன்னொரு மாணவர் கூட்டமும் அதே விதமாகவும் சென்று கொண்டிருப்பதை அவர்கள் பாடசாலை விட்ட பின்னர் வீடு திரும்பும்போது நாங்கள் பார்ப்பதுண்டு. எல்லாப் பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் ஒரே விதமாகச்

சென்றுகொண்டிருப்பதை விட வித்தியாசமெதுவும் காணப்பட முடியாது. இதுபற்றிச் சற்று சிந்தித்துப்பாருங்கள்.

நான் கத்தோலிக்கக் கல்லூரியொன்றில் படித்தேன். அந்தக் கல்லூரியின் தற்போதைய அதிபரும் இங்கு பிரசன்னமாய் இருக்கின்றார். லோரன்ஸ் வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்த என்னை புனித ஜோசப் கல்லூரியில் சேர்ப்பதற்கு எனது தந்தையார் பேராவல் கொண்டிருந்தார். என்ன காரணம் என்று எனக்குத் தெரியாது. புனித ஜோசப் கல்லூரியில் மாணவர் ஒருவரைச் சேர்ப்பது அரிதான காரியமென்று பலர் கூறி வந்தனர். புனித ஜோசப் கல்லூரியில் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிறார்களுக்குக் கதவு திறக்கப்பட மாட்டாதென்னும் அபிப்பிராயம் அக்காலத்தில் நிலவியது. ஆனால் பிற்காலத்திலும் எனது தந்தையார் அதில் என்னைச் சேர்ப்பதற்கு ஏன் நினைத்தார் என்று எனக்குச் சொல்லவில்லை. எமது தந்தையார், பெரியார் அநகாரிக்க தர்மபாலரை அதிக விசுவாசத்துடன் பின்பற்றிய ஒருவர். திருவாளர் பீ. த எஸ். குலரத்தினாவைப் போன்ற புகழ்பெற்ற அறிஞர்களையும் போற்றிய ஒருவர். அத்துடன் அக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பல்வேறு தேசிய இயக்கங்களிலும் அக்கறை கொண்டவராக எனது தந்தையார் விளங்கினார். அங்ஙனமாயினும் என்னைப் புனித ஜோசப் கல்லூரியில் சேர்க்க வேண்டுமென விடாப்பிடியாய் இருந்தார். ஆனால் அது மிகவும் அரிதான காரியமாகவே இருந்தது.

எமது உறவினரான பெண்மணியொருவர் மாத்தறைக் கொன்வெண்டில் பணியாற்றி வந்தார். அவர் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி. அக் காலத்தில் புனித ஜோசப் கல்லூரியின் அதிபராக விளங்கிய வண. எம். ஜே. லெகொக் பிதா அவர்கள் அப்பெண்மணிக்கு பரிச்சயமானவர். எமது தந்தையாரின் வற்புறுத் தலின்பேரில் அப்பெண்மணி கொழும்புக்கு வந்து என்னைப் புனித ஜோசப் கல்லூரிக்கு அழைத்துச் சென்றார். அக் காலத்து வழக்கத் தின்படி எனது தந்தையார் கொண்டையை வளர்த்துக் கட்டிவைத் திருந்தார். தாமும் கல்லூரி அதிபரைச் சந்திக்கப்போனால் கல்லூரி மாணவர்கள் என்னைக் கேலி செய்யக்கூடுமென்று நினைத்த எனது தந்தையார் வெளிவிராந்தையில் தங்கி இருந்தார். எமது உறவினரான பெண்மணிதான் என்னை அழைத்துச் சென்றார். இந்தச் சம்பவம் பாடசாலைத் தவணையொன்றின் நடுவில்தான் இடம்பெற்றது. எனவே, புதிதாகப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதில்லை.

என்றாலும் எங்கள் உறவினர் வண. லெகொக் பிதாவினைச் சந்தித்து பின்வருமாறு கேட்டுக்கொண்டார். " ஆனந்தாக் கல்லூரியிலும் நாலந்தாக் கல்லூரியிலும் மாணவர்களை எளிதில் சேர்த்துக் கொள்ளமுடியுமாயினும் இந்தச் சிறாரை புனித ஜோசப் கல்லூரியில் சேர்த்துக் கொள்ளுங்கள் " என்று எனது உறவினர் கூறினார்.

வண. லெகொக் பிதா அவர்கள் என்னைப் பார்த்துச் சில கேள்விகளைக் கேட்டார். " நீர் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவரா ? " என்றும் கேட்டார். அதற்கு நான் " ஆம் " என்று பதில் அளித்தேன். அப்பொழுது நான் தம்மப் பாடசாலையில் படித்துக்கொண்டிருந்தேன். " ஏன் நீங்கள் பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்றீர்கள் ? " என்றும் பின்னர் கேட்டார். அதற்கு நான் எனக்கு புத்த பகவானிடம் தீராத அன்பு உண்டென்று குறிப்பிட்டேன். கல்லூரி அதிபர் ஏன் என்று கேட்டார். அதற்கு நான் " புத்தபகவான் கருணாமூர்த்தியாக இருக்கின்றார் " என்று பதில் அளித்தேன். அதனைக்கேட்ட கல்லூரி அதிபர் என்னை தமது கல்லூரியில் உடனே சேர்த்துக்கொண்டார். லோரன்ஸ் கல்லூரியிலிருந்து வழங்கப்பட்டிருந்த சான்றிதழின்படி உரிய வகுப்பில் என்னைச் சேர்த்தார். அக்காலத்து வழக்கத்தின்படி புதிய கல்லூரியொன்றில் மாணவர் ஒருவரைச் சேர்த்துக்கொள்ளும்போது அவர் முன்பிருந்த வகுப்புக்குக் கீழான வகுப்பில்தான் சேர்த்துக் கொள்வார்கள். ஆனால் எனக்கு நான் இருந்த அதே வகுப்பில் சேரும் அதிர்ஷ்டம் கிடைத்தது.

புனித ஜோசப் கல்லூரியில் நாங்கள் படித்த காலத்தில் எங்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி ஒன்றைப்பற்றி இப்பொழுது நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். அக்காலத்தில் என்னோடு படித்தவர்கள் பலர் இப்பொழுது எமது நாட்டில் உயர்ந்த பதவிகளை வகித்துக்கொண் டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் நான் கூறுவதற்குச் சான்று பகருவார்கள். மனித வாழ்வின் அர்த்தத்தினைப் புரிந்து கொள்ளக்கூடிய நடைமுறைப்பயிற்சியொன்று எங்களுக்கு அக் கல்லூரியில் வழங்கப் பட்டது. முப்பது மாணவர்களைக் கொண்ட வகுப்பில் இருந்து மாணவர்கள் இருவரை அல்லது மூவரைத் தேர்ந்தெடுத்து பயிற்சி யளிக்கப்படும் திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்தது. அங்ஙனம் தெரிவு செய்யப்பட்டவர்கள் பாடசாலை தொடங்குவதற்கு முன்னர் பாடசாலைக்கு வரவேண்டும். வகுப்பறையினைச் சுத்தம் செய்தல் வேண்டும். மேசைகளையும் வாங்குகளையும் ஒழுங்குபடுத்தல் வேண்டும். வகுப்பு இருக்கின்ற கட்டிடத்துக்கு வெளியேயுள்ள வளவில் குப்பை கூழங்கள் இருப்பின் அவற்றை அகற்றுதல் வேண்டும். ஒரு மாதம் வரை அவர்கள் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமான பயிற்சியென்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். தமது வகுப்பறையைத் தாமே ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் வேண்டும். பாடசாலை விட்டபின்னரும் சில மாண வர்கள் வகுப்பறையினை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். அதுமட்டுமன்றி வகுப்பறையினைத் துப்புரவாக்கிய பின்னர்தான் வீடு செல்லுதல் வேண்டும். நாளைக் காலையில் அந்த வேலையினைச் செய்வதற்கு வேறு மாணவர்கள் சிலருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தாலும் சில வேளை அவர்கள் வரத்தவறினால் அந்த ஏற்பாட்டின்கீழ் கல்லூரி வேலைகள் தடையின்றி இடம்பெறும். வகுப்பறைகள் எல்லாம் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இங்ஙனம் எதிர்பாராத நிகழ்ச்சிகளைச் சமாளித் துக் கொள்ளக்கூடிய பயிற்சி எங்களுக்கு அளிக்கப்பட்டது.

பெற்றோர்களை பாடசாலைக்கு அழைத்துக் கூட்டங்களை நடாத்தி வகுப்பு ஆசிரியருடன் தொடர்பு கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட் டிருந்தது. சிறுவர்களுக்கென வகுக்கப்பட்டிருந்த நிகழ்ச்சி நிரல்பற்றி அக்கூட்டத்தின்போது தெரிவிப்பதுண்டு. பாடப் புத்தகங்களை வாசிப் பதற்கு குறிப்பிட்டவொரு நேரமும் விளையாடுவதற்கு குறிப்பிட்ட வொரு நேரமும் அடுத்தநாள் பாடசாலைக்கு வருவதற்கு ஆயத்தம் செய்து கொள்வதற்கான ஒரு நேரமும் குறிக்கப்பட்டிருந்தன. பாதணி களைச் செம்மையாக வைத்துக்கொள்ளும் முறைகள்பற்றியும் சீருடை களைச் செம்மையாக வைத்துக்கொள்ளும் முறைபற்றியும் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வேலைகளை நாளைக்காலையில் செய் யக்கூடாது, அவற்றை இன்றே செய்துவிட்டு எல்லா ஆயத்தங்களையும் செய்தபின்னர்தான் மாணவர்கள் நித்திரைக்குப் போதல் வேண்டும். இந்த நிகழ்ச்சி நிரல்பற்றிப் பெற்றோருக்குத் தெரிவித்து அதனை மாணவர்கள் கடைப்பிடிக்கின்றனராவென்பதை மேற்பார்வையிடுவதற் கும் கூறப்பட்டிருந்தது. இங்ஙனம், தினசரி வேலைகளை ஓர் ஒழுங்கு முறையின்படி செய்வதற்கு எங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

நாங்கள் பள்ளி சென்றகாலத்தில் எங்களுக்கு அளிக்கப்பட்ட இந்தப் பயிற்சிபற்றி நான் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கான காரணம் அது மிகவும் உபயோகமான வழி முறையாக இருப்பதேயாகும். அதன்வழி எங்களை வாழ்வாங்கு வாழ ஆயத்தமாகிக் கொள்வதற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தம்மை எப்பொழுதும் ஆயத்தமாக்கிக் கொண்டிருப் பது சாரண இயக்கத்தின் ஒரு முக்கிய குறிக்கோளாகும். ஒரு செயலினை நிறைவேற்றுவதற்குப் பல மாற்றுவழிகளைக் கண்டிருப்பது அவசிய

மாகும். ஒரு செயலை நிறைவேற்ற வேண்டியவிடத்தும் அதனை ஒழுங்காகச் செய்யவேண்டியவிடத்தும் அதற்குள்ள தடைகள் யாவை யென்று முன்னரே அறிந்திருத்தல் அவசியமென்று எமது ஆசிரியர்கள் எங்களுக்குப் போதித்திருந்தனர். நாங்கள் செய்யும் எந்த வேலைக்கும் தடைகள் இருக்கின்றனவென்பது இதன் அர்த்தம் அல்ல. ஆனால் தடைகள் ஏற்படக்கூடிய நிலைகள் இருந்தால் அவற்றைச் சமாளித்துக் கொள்வதற்கு ஆயத்தமாக இருப்பது புத்திசாலித்தனமாகும்.

அக்காலத்தில் ஆனந்தாக் கல்லூரி எமது நாட்டு உறுதிப்பொருள் களை கட்டிக்காக்கும் ஒரு கேந்திர நிலையமாகப் புகழ்பெற்று இருந்தது. மேலே குறிப்பிட்ட பயிற்சியினைப்போன்ற ஒரு பயிற்சி எமது கல்லூரியிலிருந்து பெறக்கூடிய வாய்ப்பு இருக்கும் பொழுது எமது கல்லூரியின் பாடவிதானம் சிறப்புற அமைந்துள்ளதென்ற எண்ணம் நிலவுவது இயல்பாகும். ஆனந்தாக் கல்லூரியில் எல்லாக் காலங்களிலும் தர்ம போதனாசிரியர் ஒருவர் பணிபுரிந்து வந்துள்ளார். பலாங்கொடை ஆனந்தா மைத்திரேய மகாநாயக்க தேரர் அவர்கள் ஆனந்தாக் கல்லூரியிலே கல்வி பயின்று அக்கல்லூரியில் தர்ம போதனாசிரியராக வும் பணிபுரிந்துள்ளார். நான் பள்ளி மாணவனாக இருந்த காலத்தில் சமூகசேவைப் பணிகளுக்கு ஆதரவை நாடும்பொருட்டு இக் கல்லூரியின் அறிஞர்களைச் சந்திக்க வந்துள்ளேன். அக்காலத்தில் ஆனந்தாக் கல்லூரியில் படிப்பித்த தர்மபோதனாசிரியர்கள் பாளி, வடமொழி என்பவற்றைப் போன்ற கீழைத்தேய மொழிகளையும் கற்பிப்பதை அறிந்துகொண்ட புனித ஜோசப் கல்லூரியின் உதவி அதிபர் வணக்கத் துக்குரிய பிதா டி. ஜே. அந்தனி அவர்கள் புனித ஜோசப் கல்லூரியிலும் தேசிய பண்பாட்டுக்கு இசைவான திட்டமொன்றை வகுப்பதற்கு ஆவன செய்தார். புனித ஜோசப் கல்லூரியில் கீழைத் தேய மொழிப் பிரிவு ஒன்றை அவர் நிறுவினார். திரு. சி. எம். ஒஸ்ரின் த சில்வாவை பௌத்த போதனாசிரியராகவும் நியமித்தார்.

திபெத்து நாட்டைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய எஸ். மகிந்த தேரரின் "விடுதலை மந்திரம்" என்ற நூலினைப் புனித ஜோசப் கல்லூரியில் படித்த காலத்தில்தான் மனப்பாடம் செய்து கொண்டேன். அந்தக் கத்தோலிக்க பிதாக்கள் தமது கல்லூரியில் தேசிய பண்பாட்டுக்கு இசைவான பாடங்களைக் கற்பிப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டிருந்தார்கள். இந்த ஆனந்தாக் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி ஆகியவற்றைப் போன்ற கல்லூரிகளில் காணப்பட்ட பல பண்பாடுகளைக் கற்பிக்கும் போக்கினை, தேசியத் தேவையெனப் புரிந்துகொண்டு

அவற்றைக் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தனர். எனவே இந்த ஆனந்தாக் கல்லூரி அமைந்துள்ள இடம் மிகப் புனிதமான இடமாகும். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடமாகும்.

தேசியக் கேந்திர நிலையம்

எமது நாட்டுச் சுயாதிக்கத்தினையும் கலாசாரத்தினையும் பேணும் நோக்கில் கூட்டங்கள் பலவற்றையும் போராட்ட இயக்கங்கள் பல வற்றையும் ஆரம்பித்த புகழ்பெற்ற இடமாக ஆனந்தாக் கல்லூரி திகழுகின்றது. இந்த நாட்டில் ஏற்பட்ட சமகாலத்திய பிரச்சினைகள் ஆராயப்பட்ட கூட்டங்கள் யாவும் ஆனந்தாக் கல்லூரியில்தான் கூட்டப் பட்டுள்ளன. சில நாட்களில் வெளியரங்கிலும் வேறு நாட்களில் ஒல்கொட் மண்டபத்திலும் அந்தக் கூட்டங்கள் நடைபெற்றன. எனவே இந்தக் கல்லூரியானது கல்வி நிலையமாக மட்டுமன்றி தேசியக் கேந்திர நிலையமாகவும் இயங்கி வந்துள்ளது. இந்த ஆனந்தாக் கல்லூரிக்கே சிறப்பான ஒரு அம்சம் உள்ளது. அதாவது, இனவாதத்துக்கு இங்கு இடமிருக்கவில்லை. வேறு மதங்களைக் கண்டனம் செய்யும் போக் குக்கும் இடமிருக்கவில்லை. இங்கு இடம்பெற்ற சகல போராட்டங்களும் தார்மீக அடிப்படையில் நடாத்தப்பட்டனவென்பதை ஞாபகத்தில் வைத் துக்கொள்ளுதல் வேண்டும். இன, மதக் கிளர்ச்சிகள் ஏற்படாதவாறு அத்தேசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதுவே ஆனந்தாக் கல்லூரியின் சிறப்பம்சமாகும். கடந்தகால வரலாற்றை ஆராயுமிடத்து பொன்னெழுத்தில் எழுதப்பட்ட சம்பவங்கள் பல ஆனந்தாக் கல்லூரிக் குப் புகழினைத் தேடித் தந்துள்ளனவென்பதைக் காணலாம். அந்த வகையில் நோக்குமிடத்து ஆனந்தாக் கல்லூரியைப் போன்ற புகழ் பெற்ற கல்லூரிகளுக்கு இன்றியமையாத மறுமலர்ச்சிப் போக்கு இன்று இருக்கின்றது. அந்த மறுமலர்ச்சிப் போக்கு இன்றைய ஆனந்தாக் கல்லூரிக்கு இருக்கின்றதா என்பது எனக்குத் தெரியாது. எனவே அதுபற்றி நான் பேசப் போவதில்லை.

எனவே, உங்கள் கல்லூரியின் வர்ணத்தை அணிந்துகொள்ளாத நேரங்களிலும் இவர் ஆனந்தாக் கல்லூரியின் மாணவரென்பதை உங்கள் நடத்தையாலே காட்டுங்கள். அத்தகைய சிறந்த பண்பாளர் களாகவும் சீராளர்களாகவும் நீங்கள் இருத்தல் வேண்டும். பரமஞான சங்கம் ஒல்கொட் கல்லூரியினை இவ்விடத்தில் ஆரம்பித்த காலத்தில் அச்சீரிய பண்புகள் சீரழிந்து இருந்தது. அதற்குப் பரிகாரம் காணு

வதற்குப் பரமஞான சங்கம் எடுத்த முயற்சிக்கு பல முட்டுக் கட்டைகள் ஏற்பட்டதெனினும் அவற்றை அகற்றி சீரான வழிக்கு வரக்கூடிய நிலை பின்னர் ஏற்பட்டது.

ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர்களும் கல்லூரி அதிபர் உள்ளிட்ட பெற்றோர்களும் தற்போதைய மாணவர்களும் இக்கல்லூரி யினைத் தாபிப்பதற்கு ஏதுவான நோக்கங்களைக் கண்டறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு அவசியமான ஒழுக்கநெறிகளைக் கடைப்பிடிப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும். அன்று, பரமஞான பௌத்த சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ஆனந்தாக் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி, தர்மராஜக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்கும் மாணவ, மாணவிகள் மும்மணிகளை வணங்குபவர்களாகவும் பெற்றோர் களை வணங்குபவர்களாகவும் பெரியோரைப் போற்றுபவர்களாகவும் ஆசிரியர்களைப் போற்றுபவர்களாகவும் வகுப்பறையில் ஒழுக்க சீலர்களாகப் படிப்பவர்களாகவும் தான் மட்டுமன்றி ஏனையவர்களும் சமூகத்தில் வாழவேண்டுமென சிறுவயதில் இருந்தே செயல்படுபவர் களாகவும் நாட்டின் பொதுச் சொத்துக்களை தமது சொத்துக்களாக மதிப்பவர்களாகவும் இருப்பார்களாயின் தமது தந்தையெனக் கூறத் தகுந்த இக்கல்லூரியினை பேணிக்காத்தல் வேண்டும். எமது வகுப்பினையும் எமது கல்லூரியினையும் இக் கல்லூரி வளவினையும் எமக்குப் புகலிடம் அளித்துள்ள இக் கல்வி நிலையத்தினையும் நாங்கள் அனைவரும் பேணிக்காத்தல் வேண்டுமென்ற சீரிய நோக்கத்துடன் பணிபுரிதல் வேண்டும். அப்பொழுதுதான் உங்களுக்கேயுரிய தனிப்பண்பு இருக்கின்றதென்பதை ஏனையோருக்குக் காட்டமுடியும். எமது மாணவ மாணவிகளை உரியமுறையில் வழிநடத்த முடியுமாயின் தமது வகுப்பறையினையும் மேசை வாங்குகளையும் ஒழுங்கான முறையில் வைத்துக்கொள்ளக்கூடிய பண்பில் சிறந்த மாணாக்கர் பரம்பரையினை அதாவது எமக்குப் பெருமையினைத் தேடித் தருகின்ற இளந்தலை முறையினரை நாங்கள் உருவாக்கிக்கொள்ளலாம்.

கம்உதாவ விழாக்கள் எடுக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் நாங்கள் எமது நாட்டுப் பிள்ளைகளின் திறமைகளைப்பற்றி ஆராய்ந்து பார்த் துள்ளோம். அண்மைக் காலத்தில் இடம் பெற்ற பல்லேகலே, கம்புறு பிட்டியா கம்உதாவ விழாக்களின்போது எமது பிள்ளைகளின் திறமைகள் பற்றிய வியத்தகு அனுபவங்களை நாங்கள் பெற்றுள்ளோம். அவ்விரு இடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளில் சாதாரண தர வகுப்புகளிலும் உயர்தர வகுப்புகளிலும் கல்விகற்கும் மாணவர் களுக்கு பாடசாலை நேரத்தின் பின்னர் ஒருமணி நேரம் அல்லது

இரண்டு மணி நேரம் வர்ணம் பூசுதல், சித்திரம் வரைதல் முதலிய சிறிய வேலைகள் ஒப்படைக்கப்பட்டன. அதற்குரிய கூலியும் வழங்கப்பட்டது. கடந்த ஏழெட்டு மாதங்களில் மாதாந்தம் ரூ. 1,500 — 2,000 வரையான ஆதாயத்தினை தாங்கள் பெற்றுக்கொண்டதாகவும் அப்பணத்தைப் பெற்றோர்களிடம் கையளித்தபொழுது பெற்றோர்கள் அளவிலா மகிழ்ச்சி அடைந்ததாகவும் சில மாணவர்கள் எனக்குத் தெரிவித்தனர். அந்த மாணவர்களுக்கு அத்தகைய வேலைகளை ஒப்படைத்ததன் விளைவாக அந்த நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆக வேண்டியிருந்த செலவும் 75% தால் குறைவுற்றது. சில மாணவர்கள் தூரிகையி னைப் பிடிக்கவும் தெரியாதவர்களாய் இருந்தனர். ஆயினும், இரண்டு மூன்று நாட்களில் அந்த வேலைகளில் பயிற்சியினைப் பெற்று மிகவும் திறமையாக வர்ணம் பூசினார்கள். இங்ஙனம் பள்ளிச் சிறார் களுக்கு தருணம் கொடுக்கப்பட்டமையால் எமது செலவினையும் வெகுவாகக் குறைக்க முடிந்தது. இத்தகைய வேலைத் திட்டங்களை இப்பொழுது நாங்கள் எல்லாத் துறைகளிலும் புகுத்துவதற்கு ஆவன செய்து வருகின்றோம். ஆதலால், இந்தக் கல்லூரியின் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளுமிடத்து அவ்வேலையின் 25% ஆவது கல்லூரியின் மாணவர்களும் ஆசிரியர், பெற்றோர்களும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். இந்தக் கல்லூரிக்கு, சேவைக்கே அர்ப் பணித்துக் கொண்ட பழைய மாணவர் சங்கமொன்றும் இருக்கின்றது. அச்சங்கம் அயராது உழைத்து வருகின்றது. மிகப்பெரிய வேலைத் திட்டங்களை ஆரம்பித்துச் செயல்படுத்தி வருகின்றது. தற்போதைய கல்லூரி அதிபரான ராஜபக்ஸ அவர்களின் பதவிக் காலத்தில் இக்கல்லூரி வளவினைப் பெரிதாக்கிக்கொள்ளும் சாத்தியக்கூறு ஏற்பட்டது. சிறந்த விளையாட்டு மைதானமொன்றைப் பெற்றுக் கொள்ளவும் முடிந்தது. பழைய மாணவர் சங்கம் காட்டிய பேரூக்கத்தின் விளைவாக இத்தகைய பணிகளை நிறைவேற்றிக்கொள்ளும் சாத்தியம் ஏற்பட்டது.

இந்த ஆனந்தாக் கல்லூரியை கட்டியெழுப்புவதற்கு பயன்படுத்தப் பட்டுள்ள எல்லாப் பணங்களும் பொதுமக்கள் வரையாது வழங்கிய பணங்களாகும். இந்த ஆனந்தாக் கல்லூரி அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்க வளவும் அதன் கட்டிடங்களும் இந்நாட்டு மக்களது உணர்ச்சி வேகத்தினால் உயிர்பெற்ற இடங்களாகவே இருக்கின்றன.

எமது பள்ளிச் சிறார்கள் பாடசாலைக் கல்வியினைப் பெறும் அதேநேரத்தில் ஏதாவது துறையில் செய்முறைப் பயிற்சி

யொன்றினையும் பெறுவதற்குச் சிறுவயதிலிருந்தே சங்கற்பம் செய்து கொள்ளுதல் வேண்டும். தொழிற்றுறைப் பயிற்சியொன்றைப் பெறுதல் மரியாதைக் குறைவென எண்ணவேண்டாம். ஏதாவதொரு துறையில் பயிற்சியினைப் பெற்றுக்கொள்ளுங்கள். தமது உடலைப் பயன்படுத்தி பிரயோசனமான முறையில் ஏதேனும் ஒரு தொழிலினைப் பயிலுங்கள்.

ஒவ்வொரு மாணவரும் இத்தகைய தொழிற்பயிற்சியொன்றைப் பெறவேண்டுமென்பதைக் கட்டாயப்படுத்துவதற்காக ஐக்கிய அமெரிக்கா வில் சட்டமொன்றும் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்நாட்டில் கலைக் கழகக் கல்வியைப் பயிலும் மாணவர்கள் அனைவரும் ஏதேனும் தொழிலொன்றை அல்லது தொழில்நுட்பத்தினைப் படிக்கவேண்டு மென்று பணித்துள்ளார்கள். கலைக்கழகப் படிப்பினால் சீவனோ பாயமொன்றை தேடிக்கொள்ள முடியாதவிடத்து தமது தொழிற்பயிற்சி யினைக்கொண்டு சீவனம்பண்ண முடியுமென்ற கருத்தினைத்தான் அங்ஙனம் புகட்டி வருகின்றார்கள். இன்று, எமது கல்வித் துறையிலும் அத்தகைய செயல்திட்டமொன்றைப் புகுத்துவதற்கு ஆவன செய்துவரு கின்றோம். சம்பந்தப்பட்ட அனைவரினதும் அபிப்பிராயங்களை ஆராய்ந்து அத்தகைய திட்டமொன்றை தயார் செய்வதற்கு தேசிய கல்வி ஆணைக்குழுவொன்று தற்போது நியமிக்கப்பட்டு உள்ளது. அத்தகைய கல்வி ஆணைக்குழு இதுகாறும் நியமிக்கப்படா திருந்தமைபற்றி நாங்கள் வருந்துகின்றோம். அத்தகைய கல்வி ஆணைக்குழுவின் மேற்பார்வை இல்லாத விடத்து அந்தந்தக் காலங் களில் கல்விக்குப் பொறுப்பாக வருகின்ற அமைச்சர்களது விருப்பத்திற்கேற்றவாறு கல்வித் திட்டங்களை மாற்றியமைத்தமை காரணமாக எமது நாட்டுக் கல்வித்துறை மாலுமி இல்லாத கப்பலைப் போன்று திசையறியாது சென்றுகொண்டிருக்கும். அதுமட்டுமன்றி, ஏராளமான பணத்தை செலவிட வேண்டிய திட்டமாகவும் அது அமைகின்றது. எனவே, எமது நாட்டுக்குரிய மிகத் தெளிவான கல்வித் திட்டமொன்றைத் தயாரிக்கும்பொருட்டு எமது நாட்டு அறிஞர்கள் அங்கத்துவம் வகிக்கும் தேசிய கல்வி ஆணைக்குழுவொன்றைத் தாபிக்கமுடிந்தமைபற்றி நான் மகிழ்ச்சி அடைகின்றேன். எமது நாடு எழுத்தறிவுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்புநோக்கப்படுமிடத்து முதன்மையான இடத்தில் உள்ளது.

## இலவசக் கல்வியின் நன்மைகள்

1946 ஆம் ஆண்டில் எமது நாட்டுச் சனத்தொகையின் எழுத்தறிவு உள்ளவர்களின் எண்ணிக்கை 57% ஆகும். கலாநிதி சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கர அமைச்சரின் கீழ் அக்காலத்தில் அரசவை மன்றத்தில் பணிபுரிந்த எமது. தலைவர்களின் அறிவார்ந்த செயல்முறையின் காரணமாக இந்நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வியால் எங்களுக்கு பெரு நன்மைகள் ஏற்பட்டன. கல்வி அறிவு உள்ளவர்களது தற்போதைய எண்ணிக்கை சனத்தொகையில் 87% ஆகும். இதற்கு முன்னர் நாங்கள் எழுத்தறிவு படைத்த நாடுகளைப்பொறுத்தவரை இரண்டாம் இடத்தில் இருந்தோமெனினும் தற்பொழுது எமது நாடு முதலிடத்துக்கு வந்து இரண்டாவது இடத்தில் தென்கொரிய நாடு இருக்கின்றது. நாங்கள் இயன்றவாறு இலவசமாகப் பாடநூல்கள் வழங்கவும் இலவசமாக பகலுணவினை வழங்கவும் ஆவன செய்து வருகின்றோம். இவ்விரு நடவடிக்கைகளும் பொருளாதார வகையில் இன்னலுறும் பெற்றோர்களின் சிறார்களும் எளிதில் கல்விகற்பதற்கு வசதியளிக்கும். 1946 ஆம் ஆண்டில் 5000 முதனிலை, இடைநிலைப் பாடசாலைகள் மட்டுமே இயங்கிவந்தன. தற்பொழுது சுமார் 10,000 முதனிலைப் பாடசாலைகளும் இடைநிலைப் பாடசாலைகளும் உள்ளன. 1989 ஆம் ஆண்டில் எமது மக்கட் தொகையின் 25% மானோர் பாடசாலைப் பிள்ளைகளாக இருந்தனர். அதாவது மொத்தப் பாட சாலைப் பிள்ளைகளின் எண்ணிக்கை 42 இலட்சங்களாகும். தற் பொழுது 1,84,000 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். முன்னாள் கல்வி அமைச்சர் திரு. ஈரியகொல்ல அவர்களது காலத்தில் இந்நாட்டில் 84,000 ஆசிரியர்களே இருந்தனர். ஆனால் இன்று 1,84,000 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். மொத்தச் சனத்தொகையில் 1600 பேர்களுக்கு ஒரு பாடசாலை வீதம் இருக்கின்றது. 1988 ஆம் ஆண்டில் அதன் சதவீதம் 2.58% ஆக இருந்தது. 1991 ஆம் ஆண்டில் அந்தச் சதவீதம் மேலும் அதிகரித்து 2.99% வரை உயர்ந்துள்ளது.

## ஒன்பது மாகாணங்களிலும் ஒன்பது இணைந்த பல்கலைக்கழகங்கள்

இந்த ஆண்டின் இறுதிக்கு முன்னர் ஒன்பது மாகாணங்களிலும் நாங்கள் ஒன்பது இணைந்த பல்கலைக்கழகங்களைத் தாபிப்பதற்கு ஆவன செய்து வருகின்றோம். எதிர்வரும் 4 ஆண்டுக்காலம் முடிவடைவதற்கு முன்னர் எல்லா மாவட்டங்களிலும் இணைந்த பல்கலைக்கழகமொன்று நிறுவப்பட உள்ளது. இவ்விணைந்த

பல்கலைக்கழகங்கள் தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற பெரிய பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படும். அப் பல்கலைக்கழகக் கல்லூரிகளின் கல்வித் தரமும் பட்டப்படிப்புச் சோதனைகளும் அப் பெரிய பல்கலைக்கழகங்களாலேயே மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த ஆண்டின் இறுதிக்கு முன்னர் மாகாண அடிப்படையில் 9 இணைந்த பல்கலைக்கழகங்களும் எதிர்வரும் நான்கு ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் மாவட்ட அடிப்படையில் 25 இணைந்த பல்கலைக்கழ கங்களும் நிறுவப்பட உள்ளன. இவற்றில் புகட்டப்படும் பாடத் திட்டங்களும் நடாத்தப்படும் பரீட்சைகளும் இன்று இயங்கிக்கொண் டிருக்கும் 7 பெரிய பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டங்களுக்கும் பரீட்சைகளுக்கும் சமமாகவே இருக்கும். அங்ஙனமின்றி இணைந்த பல்கலைக்கழகங்களின் மூலம் தரம்குறைந்த பட்டங்களை அளிப்பதற்கு உத்தேசமில்லையென்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன்.

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் சித்தியடைகின்ற அனை வரையும் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களில் சேர்த்துக்கொள்வதற் கான வசதியில்லை. பல்கலைக்கழகங்களை நிறுவினாலும் அவற்றில் வதிவிட வசதிகளைக் கொடுப்பது சிரமமாக உள்ளது. இலங்கை பூராவிலும் 25 இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரிகளை நிறுவும்போது தமது வீடுகளிலேயே இருந்து அந்தப் பல்கலைக்கழகக் கல்லூரி 25 இலும் அனுமதிபெற்று அடிப்படைப் பல்கலைக்கழகங்களின் பாடத் திட்டங்களையே கற்று அதே பட்டங்களை பெறும் வாய்ப்பு எமது மாணவ, மாணவிகளுக்குக் கிடைக்கும். இத்தகைய ஏற்பாடு முன்னரும் இந்த நாட்டில் வழக்கில் இருந்தது.

பூரண கற்கை வசதிகளையும் கொண்ட பல்கலைக்கழகங்கள் இந்நாட்டில் தாபிக்கப்படுவதற்கு முன்னர் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரி மாத்திரமே இயங்கிக்கொண்டு இருந்தது. எமது நாட்டுத் தற்போதைய பட்டதாரிகள் பலர் அந்தப் பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்து இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ், இலண்டன் ஆகிய பல்கலைக்கழகங்களில் இருந்து பட்டங்களைப் பெற்றுள்ளனர். இங்கி லாந்திலுள்ள பல்கலைக்கழகங்களில் பாடநெறிகளை இலங்கையி லிருந்து கற்று அதே பரீட்சைகளுக்குத் தோற்றினார்கள். அங்கிருந்து வினாத்தாள்கள் இங்கு அனுப்பப்பட்டன. விடைத்தாள்களும் அங்கு அனுப்பப்பட்டன. இலண்டன் பல்கலைக்கழகத்தின் வதிவிட மாணவர் களுக்கு வழங்கப்பட்ட அதேபட்டங்கள் இலங்கையின் மாணவர்களுக் கும் வழங்கப்பட்டன. அக்காலத்தில் அப் பட்டங்களுக்கு இலண்டன்

கலைமானிப் பட்டமென்று பெயரிடப்பட்டு இருந்தது. கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியும் அக்காலத்தில் இணைந்த பல்கலைக் கழகமாகவே செயற்பட்டு வந்தது. அதே பல்கலைக்கழகக் கல்லூரி இன்னொரு காலத்தில் பூரண வசதிகளைக் கொண்ட பல்கலைக் கழகமாக பேராதனையில் தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் மேலும் 07 பல்கலைக்கழகங்கள் எமது நாட்டில் தாபிக்கப்பட்டன. உத்தேச 25 பல்கலைக்கழகக் கல்லூரிகளும் பெரிய பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்டு அதே பட்டங்களை வழங்குவதற்கு ஆவன செய்ய இருக்கின்றோம். அந்த ஏற்பாட்டின்படி தற்போது எமது நாட்டிலுள்ள உயர் கல்வி நிலையங்களில் படிக்கின்ற மாணவர்கள் கூடிய சீக்கிரத்தில் பட்டங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

அத்தகைய ஏற்பாடு இல்லாது போனால், ஏராளமானவர்கள் பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் வசதியற்றவர்களாய் கதியற்ற நிலைக்குத் தள்ளப்படுவார்கள். இந்த ஆண்டின் இறுதிக்கு முன்னர் நிறுவப்படவுள்ள 09 பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்காக 300 கோடி ரூபா நாங்கள் தற்பொழுது ஒதுக்கியுள்ளோம். தற்பொழுது சேவை யிலுள்ள 1,84,000 ஆசிரியர்களுள் 57 வீதத்தினர் மட்டுமே பயிற்சி பெற்ற ஆசிரியர்களாக உள்ளனர். இது விரும்பத்தகாத நிலையாகும். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் பலவற்றை நிறுவி இன்று ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதை வேகப்படுத்தி வருகின்றோம். அங்ஙனம் புதிய பயிற்சிக் கலாசாலைகளை நிறுவாமல் தற்போதுள்ள பயிற்சிக் கலாசாலைகளின் மூலம் 28,000 ஆசிரியர்களுக்கு மட்டுமே ஒருவருடத்தில் பயிற்சி அளிக்கமுடியும். அங்ஙனம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டால் அனைத்து ஆசிரியர்களையும் பயிற்று விப்பதற்குப் 10 ஆண்டுகள் செல்லும், எனவே, புதிய பயிற்சிக் கலாசாலைகளை நிறுவி அவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் பயிற்சி அளிப்பதற்கு ஆவன செய்து வருகின்றோம்.

இப்பொழுது வருடாவருடம் சுமார் 1,200 பட்டதாரிகள் ஆசிரியர் சேவையில் சேர்ந்து வருகின்றனர். அதன் வண்ணம் இனிவரும் 10 ஆண்டுக் காலத்தில் 12,000 பட்டதாரி ஆசிரியர்கள் கல்விச் சேவையில் சேருவார்கள். எனவே, ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கும் வசதிகளை அதிகரிப்பதற்கு நாங்கள் ஆவன செய்து வருகின்றோம். உங்கள் கல்லூரியின் 105 ஆவது ஆண்டின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ள முடிந்தமையையிட்டு நான் பேருவகை அடைகின்றேன். இந்த ஆனந்தாக் கல்லூரியைத் தாபித்த எமது புகழ்மிக்க சான்றோர்களின்

குறிக்கோள்களைப் பற்றித்தான் நான் இதுவரை உங்களுக்கு எடுத்தியம்பினேன்.

இச் சீரிய கல்லூரியினைத் தாபிப்பதற்கு ஏதுவான குறிக்கோள்கள் யாவை என்பது உங்களுக்கு இப்பொழுது நன்றாகத் தெரியும். இது வெறுமனே கல்லூரியொன்றை தாபிக்க வேண்டுமென்ற எண்ணத்தின் படி தாபிக்கப்பட்ட கல்லூரியல்ல. ஏனைய கல்லூரிகளில் காணப்படாத தனிச்சிறப்பினைக்கொண்ட கல்லூரியாகத் திகழவேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தக் கல்லூரி நிறுவப்பட்டது. இக் கல்லூரியின் மூலம் பண்பில் சிறந்த குடிமக்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம்தான் அச் சான்றோர்களுக்கு இருந்தது. இந்த ஆனந்தாக் கல்லூரியில் கல்விபயின்ற மாணவர்கள் எமது நாட்டில் பல்வேறு துறைகளைச் சிறப்பித்து வருகின்றார்கள். நாங்கள் அந்தச் சேவையினை பெரிதும் மதிக்கின்றோம். இந்த ஆனந்தாக் கல்லூரி தாபிப்பதற்கு ஏதுவான அரிய நோக்கங்களை மறவாதிருத்தல் வேண்டுமென்பது நான் உங்கள் அனைவருக்கும் விடுக்கும் செய்தி யாகும். ஆனந்தாக் கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்கள் பண்பாளர்களாகவும் சீராளர்களாகவும் இருத்தல் வேண்டுமெனக்கூறி நான் விடைபெற்றுக்கொள்ளுகின்றேன்.

## ADDRESS OF
## HIS EXCELLENCY RANASINGHE PREMADASA
## PRESIDENT, AT THE
## ANNUAL PRIZE GIVING OF ANANDA COLLEGE
## COLOMBO ON 19.07.1991

I am told by your Principal that Ananda College was started 105 years ago. That's quite a long period of history. When you consider the times in which it was started, the reasons for which it was started and the persons who started it, you have to concede that Ananda College has had an illustrious history; more so, in view of these three reasons.

There was a time in this country when an educational institution of this kind had become imperative. For nearly 150 years we had been a subject nation of the British Empire, fast on the heels of Portuguese domination at first and Dutch rule thereafter. It was our revered national leaders of that day who made us realize, through their own experiences, the crying need of an educational institution like Ananda.

**Rising to that need**

Being subject to foreign rule inevitably brought about an erosion of our national culture at an alarming pace. Our

cherished traditional values began to disappear gradually. However, a marked turnabout of this trend took place with the dawn of a new age that saw the emergence of those noble souls Ven. Migettuwatte Gunanada and Ven. Hikkaduwe Sri Sumangala. Their indefatigable efforts received the attention of a host of lay leaders, particularly from foreign lands.

One of them was Col. Henry Steele Olcott, an American. By that time he had been taking an interest in Buddhism. On reading a report of a religious controversy that had been conducted here in this country, Col. Olcott arrived here and sought the guidance of Ven. Hikkaduwe Sri Sumangala. At that time Anagarika Dharmapala was a young man pursuing a fervent campaign against the harmful influence of Western culture and habits on our people. The combined efforts of these pioneers brought about the birth of Ananda College.

What was Ananda College needed for? For the creation of a new generation that would appreciate and promote our traditional values. By that time our people were economically crippled and spiritually weakened. This was, to a large measure, due to the neglect of the indigenous agricultural system on which the lives of our people depended. Further, as a result of the deliberate undermining of our traditional values, which was considered indispensable for the economic and moral subjugation of any people, a slavish mentality had grown in us.

We have with us the Memoirs of a British Governor of that period. He had written to the Colonial Office in London that if Ceylon is to be easily and comfortably retained under their dominion, the sense of values and

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

virtue of its inhabitants should be eliminated. Those Memoirs can still be seen in the London Museum.

It was to prevent the younger generation from falling victim to that imperialist strategy that a series of schools like Ananda was established by the Buddhist Theosophical Society. This task received the active support of Col. Olcott. There were also several patriotic Ceylonese who were at that time receiving an education in England. Their parents had brought them up in the Buddhist tradition which influenced their lives to the very end. Among these scholars were Sir Baron Jayatillake, Mr. P. de S. Kularatne and Dr. Gunapala Malalasekera. There were many others too, and they all became the pioneers of this movement that was led by these national stalwarts.

I am a past student of a Catholic School, St. Joseph's College. If I am aware of that history to a great extent, how much more should you as students of Ananda know about it?

However, the question is this: Are these Colleges – Ananda, Nalanda, Dharmaraja, Mahinda and so on – pursuing the objectives for which they were established? Are they living up to the expectations of the vast public that contributed their mite to establish them?

It is true that a College should impart a rounded education in addition to a deeper knowledge of the arts and sciences and of languages, mathematics and technology. But, there was another task to which Ananda was committed. That was to mould character; create a new generation of youth of unimpeachable moral standards; teach our young from their formative years to

order their day to day life in a way that it does not harm either society or themselves; in short, train them not be a nuisance to anybody. The noble founders of these Colleges considered it essential that all those who pass through their portals are imbued with both wisdom and virtue – qualities acquired through practice and precept.

It was to fulfill this need – the need of encouraging a disciplined way of life that does not irritate anybody, least of all one's own self – that colleges like yours were found necessary in those days. That need still remains to be fulfilled.

**Learning to respect the worthy**

Children should be taught from their early years to respect their parents who nurtured them, teachers who educated them and relations and elders who advised and guided them. Children should be made to realize the immeasurable difficulties that their parents have had to undergo in bringing them up.

There are various ways in which this could be done. I would call upon all children present here to make it a habit to worship their parents after their daily homage to the Triple Gem. You are aware of the travails your mother had undergone in bringing you into this world and of the selfless love she had shown in nursing you until you became sturdy of limb. Tell her that you will remember it throughout your life. Worshipping your father, tell him that you will never forget the immense pains he had taken to keep you and your mother and the other members of your family free from want. Mention his other virtues. When worshipping your elders and your teachers, express your eternal gratitude to them for the wisdom they have

imparted to you and the guidance given to steer your path in the right direction. You should learn the meaning of this practice.

During our school days we had the opportunity of reading various books that taught us the value and the meaning of these habits and customs. They were books written in simple language, mostly in verse, that we read and memorized with great pleasure. For instance, there was Sirith Mal Dama that instilled these values in our young minds. How these books were able to do it is a matter that deserves serious study. The stanzas were simple and straight-forward and appealed directly to the minds of both children and adults.

There were also other poetical works such as Loweda Sangarawa and Subhashitaya which were school texts. They succeeded in explaining the ways of the world and showing the difference between right and wrong with an abundance of simple examples. Social realities were presented with such vivid imagery as to capture a child's imagination. These books and many more contributed to wean us away from our subservient attitudes and to hold our heads high. They also taught us how to behave honourably.

Then, there was the Tower Hall Theatre. It was built by the Seneviratne family with encouragement by Anagarika Dharmapala who himself laid the ceremonial foundation stone for that building. The Tower Hall became the centre for the inculcation of national and moral values. Pioneer Lankan dramatists like lawyer John de Silva and Charles Dias made it the stage for their social, religious and historical plays that spot-lighted the degeneration that had

taken place in our society. These great men, in their own distinct way, used the medium of drama to rid us of our slavish mentality.

To come back to the field of education, we all know that school curricula – be it in Languages, Sciences, Arts or Technology – are similar here in our country and elsewhere in the world. But, we must realize that as much as acquiring a knowledge of these subjects, man needs good breeding as well. This is a universal truth. So, what was expected in establishing these schools was the development of character, as much as of academic knowledge, that our children could distinguish right from wrong and act without causing any injustice to either one's own self or others.

**The original aims**

At that time there was a number of denominational schools conducted by Christian Missionaries. It was not as our answer to this situation that Buddhists thought of starting Buddhist Schools. Nor did they merely want to flaunt their Buddhist identity by getting students of these Buddhist schools to begin classes after observing "Pansil". Their primary aim was to develop strength of character, for which there was no scope in the then prevailing system of school education. It was with this aim in view that, as a first step, Ananda College was started. To be more exact, this process was actually launched by setting up Sunday Dhamma Schools. The first of these was begun on Maliban Street, Pettah.

"We shall start with Sunday classes. Later, in keeping with the educational policy of the Government, we will be able to start a system of schools through which ethical

values can be promoted. While training children to sit the formal examinations, we will be able to teach them how they should conduct themselves, think free and shed the slavish mentality to which they and their parents are accustomed." That was the resolve of those early educationists.

By the way, where are the portraits of former principals of Ananda that all these years adorned the walls of Olcott Hall? I don't see them today. They should be up here so that everyone can see them.

Sinhalese scholars were not the only pioneers of this new educational movement. Your College itself was privileged to have foreigners as principals. They too shared the view that students should be taught and trained to be just and upright.

Principals and teachers of Ananda came from every community. There were Burghers, Muslims, Tamils and Sinhalese. I recall the service done by eminent men like Bultjens, A. Sivagurunathan and T. B. Jayah. They were there to help our students build a strength of character and a strength of purpose; the strength to face any crisis in life with dignity and courage; the strength to spurn inequity and uphold justice, even if it leads to a personal loss. These were noble qualities that remained suppressed when we were a subject nation held enslaved materially and spiritually. We were forced to adopt the habits and customs of our alien rulers. The result was not only a spiritual decline but also an economic decline. We of Asia began to lead European ways of life. We got used to the European habits of wining and dining. We aped European fashions. So, while on the one hand we sank into spiritual

degeneration, on the other hand an economic decline helped the alien rulers to hold us in subjection. Therefore, the establishment of Colleges like Ananda was found necessary to stem this disastrous trend.

**Identity of an Anandian**

You say with great pride that you are Anandians or Old Anandians. How can it be verified? By the colours of your tie? By the uniform you wear? Others too can wear a similar tie or a similar uniform. And, suppose you are seen outside the College premises wearing neither that tie nor that uniform, how can anybody distinguish you from a student of St. Joseph's or Zahira or Wesley? Obviously, you would have to be asked to prove your identity. You might be wondering now as to what I would suggest you do in such an instance.

See to it that wherever you go or whatever you do you behave in a decent way, in a way that does not annoy another or become a nuisance to anybody including your own self. Let that be the hallmark of an Anandian.

I studied at a Catholic College. The Head of that institution is here with us today. For some reason not known to me, my father wanted to take me out of Lorenz College and have me admitted to St. Joseph's College. There were many who said that it would be very difficult to gain admission to St. Joseph's as it was commonly believed that the doors there are shut to Buddhist children. Besides, my father was an ardent supporter of Anagarika Dharmapala and a great admirer of scholars like P. de S. Kularatne. He also took a lively interest in the national movements that were launched during that period. Nevertheless, he wanted me admitted to St. Joseph's. A most difficult job.

At that time, a relative of ours happened to be working in the Matara Convent. She was a Catholic. She knew Father M. J. Legoc, the then Rector of St. Joseph's College, quite well. At my father's insistence she took me to St. Joseph's College one day. As my father wore a top-knot, following the custom of those days, he felt that other boys might crack jokes at me if I gain admission to this College and, therefore, decided to remain outside allowing our relative to take me to the Rector. It was the middle of the term when new students are not admitted.

My relative told Father Legoc that she had come to make an unusual request, that I could easily gain admission to Ananda or Nalanda, but that she wishes to get me a place at St. Joseph's College.

Father Legoc asked me a few questions. He asked me whether I am a Buddhist, and I said "yes". I was, in fact, attending Dhamma School at that time. He asked me why I am a Buddhist. I said that it is because I like the Buddha very much. Why? Because, he is very good and very kind, I replied. I was not questioned any further. I was admitted to St. Joseph's. I was put into a class on the strength of my Lorenz College certificate. Perhaps, I was lucky in that, for at that time a new student was invariably placed in the class below the one he had been at his earlier school.

Now, I was at St. Joseph's. There were a large number of students in the classes above and below mine. Today, many of them are in high positions in society. They will bear witness to what I say. We were given a practical experience of the realities of life. To give an example, we were called upon to keep the classroom tidy and clean. There were about 30 of us in that class. We were divided into groups of three and each group had to sweep the

floor, put the chairs and tables in place and keep the classroom tidy by next morning. Two or three students were also detailed for the task of cleaning the compound of the classroom. They had to clean the dirt and rubbish outside. It was a routine that had to be followed throughout the term. The next term, there was another group assigned with these tasks.

How valuable was that training that we received! You had to keep your own classroom clean and tidy. At the end of the day, there was another group to attend to these tasks. They couldn't assign that duty to anyone else, for by the time school reopens the next day everything had to be spick and span. That was necessary for one wouldn't know whether those in charge of such work would arrive the following day. Be prepared, was the motto. What a training it was to meet the challenges that might possibly arise!

**The value of being prepared**

Parents were often got down to the school. They were in close touch with the teacher. The students had been told how to divide their time for various tasks. There was a time set apart for their lessons, a time to get ready to attend school, a time to polish their shoes and arrange clothes they have to wear. These could not be put off for the following day; they had to be done and completed the previous day itself. Parents had to ensure that this routine is followed. What a training to undertake one's responsibilities!

I mentioned this in a rather casual way. But, let me tell you that this experience has stood us in good stead today. It has taught us to be prepared. "Be Prepared" is the motto

ජනාධිපති කාර්යාලය
පුස්තකාලය

of Boy Scouts. Teachers have always told their pupils to be on the look out for possible obstacles that might arise whenever they decide on any course of action. It is not that obstacles would inevitably arise, but that they might arise and it would be wise to anticipate them.

In those days, Ananda College achieved some no mean reputation as an institution that promoted adherence to high values. Ananda came to be known as a place where a special training – a special course of study – was provided, quite distinct from what was provided elsewhere, in the Dhamma. There was a teacher for that subject. The Ven. Balangoda Ananda Maithreya was one of them. He had been a student at Ananda, before he became a teacher there. I myself had come here many a time during my school days to take part in various social activities and I have had the privilege of meeting and associating with those who showed the way at Ananda. I still remember how Dr. D. J. Anthony, Deputy Principal of St. Joseph's College, himself admitted the need of a course of study in keeping with the country's ethos and the national culture as was provided at Ananda. It was he who started a separate section at St. Joseph's for the study of oriental languages. He went further in appointing a Buddhist to be in charge of that section. I refer to Mr. C. M. Austin de Silva.

It was while I was at St. Joseph's College that I was made to memorize the Tibetan monk S. Mahinda's poem titled "Nidahase Mantraya". Even the Catholic priests at St. Joseph's saw its importance. They noticed the variety and the national complexion of the education imparted at Ananda and Nalanda and took action to fill whatever void that existed in that respect at St. Joseph's College. This place here at Ananda is undoubtedly on exalted ground.

## A national centre

It was from this place that various plans were made, various discussions held and agitation campaigns launched for the restoration of our country's independence and for the protection of our national values. Public meetings on every topical issue were in those days invariably held here at Ananda College premises – may be in this historic hall or on the lawn outside. This place became a national centre in addition to being an academic centre. Why so? Because there was no sectarian outlook here. There was no religious discrimination here. Here was the centre of the national movement that spread beyond the pale of religious or racialist bigotry. It was never the venue for religious or racial rivalry. Those were the days that deserve to be recorded in gold and worthy of being lived again by Ananda and all other colleges that were started at that time to revive our national values. I do not know to what extent those values and the high standards sought are being cherished today. But, may I ask you to let the world outside identify you as Anandians, not by the College colours you wear, but by your exemplary character.

There came a time when these standards began to fall and a parasitic growth tended to hasten the decline caused by various forces. It was at that time that Olcott College was also started within these premises. However, the threatened disaster was fortunately averted.

It should be the duty of Old Anandians and the Principal and his teaching staff to give their minds to the objectives for which Ananda was established. They should implement a code of conduct leading to those objectives. Students of Ananda and of Nalanda and Dharmaraja and other schools established by the Buddhist Theosophical

Society in those days should be made to realize the value of paying daily homage to the Triple Gem, worshipping their parents, respecting their elders, honouring their teachers, leading a morally upright life and attending to their studies diligently. They should be taught from their young days that apart from them there are also others who have a right to live in this society and that right must be respected and that these roads and public buildings and public transport are common property and must be protected. They should be made to feel that these classrooms, these College buildings and this very centre of learning belong to them and must be properly maintained. To look after these, they should first learn to look after their own parents.

Then, Anandians will be easily identified as Anandians and be justifiably proud of it. Similarly, what a pride would it be for us to see our children properly directed so that they would grow up to be worthy of our country.

**Practical training**

During preparations for the Pallekele and Kamburupitiya Gam Udawas, we tried out a certain experiment. The result was amazing.

We invited students of the Ordinary Level and Advanced Level classes in nearby schools to help us at the Gam Udawa site in whatever way they could, either by doing some painting job or by undertaking some other art work. They had to put in two hours of work after school. Some of these students told me that they earned around Rs. 1500/– to Rs. 2000/– per month throughout those seven or eight months. They had given the money to their parents who were obviously overjoyed by the gesture.

This experiment helped us to cut down on our expenditure on the two Gam Udawas by about 75%. Some of these students had not known how to handle a paint brush when they first came there, but they soon mastered the technique. Their achievements remained to be seen and admired by everybody. We are now encouraging this method elsewhere too.

I mentioned this so that you could follow the examples set by those children in handling responsibilities. You are, for instance, faced with the task of maintaining these premises. I would suggest that at least 25% of that responsibility be assigned to students, parents and teachers. You have an enthusiastic Old Boys Association. It has undertaken vast development projects. During Mr. Rajapakse's stewardship you were able to expand these premises. You have acquired a fine playground. There is much that you have been able to accomplish with the assistance of the Old Boys Association.

As you know, every cent spent on Ananda College has come from the general public. Even this historic ground and these buildings on it are redolent of the nationalist feelings of our people.

So, what I wanted to emphasize is that students should acquire, apart from book knowledge a practical vocational skill. They should be provided with a practical experience in some such pursuit. Let them not consider it as something undignified. To learn a trade or an industry would be worthwhile anytime.

Today, in the United States, it is a legal requirement. Students learning languages, sciences, arts and even

technologies must also learn a craft, a vocational skill, a technical subject. The idea behind it is that any practical skill acquired by a student would stand him in good stead even if his academic achievements fail to find him a means of livelihood. We are introducing this concept into our own system of education. It is to examine this matter and formulate a suitable educational policy that we have appointed a National Education Commission. It had been a long-felt need. The system of education followed so far had proved to be aimless, in that various individuals had used it to experiment their pet ideas on education and consequently allowed the entire exercise to go haywire. Besides, it proved to be a massive drag on the country's exchequer. I am happy, therefore, on being able to appoint a National Commission consisting of several foremost educationists of this country to formulate a meaningful educational system.

**Free education**

It has to be admitted that the general education provided in this country has been of a high level. In fact, our literacy rate, compared with most developed countries, is on the highest level.

In 1946 only 57% of our population was literate. Thanks to the wisdom of Minister C.W.W. Kannangara and the other Members of the State Council of that time, we were granted the privilege of a free education. Today, our literacy rate has reached 87%. At one time we were placed second in literacy level. That place has now gone to South Korea. We are today issuing free text books and free mid-day meals to school children. It is meant to encourage poor parents to send their children to school. In 1946, there were only 5,000 primary and secondary schools.

Today, there are about 10,000. Out of our total population, 25% are school children. By 1989 the total school-going population stood at 42 lakhs. We have 184,000 teachers today. I remember a former Minister of Education, Mr. Iriyagolla saying that there are 84,000 teachers. That was at his time. Now, the number is 184,000. We had one school for each unit of 1600 people. In 1988 that number stood at 2.58. Today, in 1991, it stands at 2.99.

**A University for each Province**

We will be establishing a University for each of the nine Provinces, before the end of this year. By the end of the next few years, we will be having 25 affiliated University Colleges, one each for the 25 Districts. These Colleges will provide an education and present students for University Exams. They will follow the University syllabuses and prepare students to sit the degree examination of the existing seven Universities. The courses of study will be on a par with that of the Universities and the Certificate issued will be equal to that granted by the Universities. In no way will these certificates be on a lower standard.

It is difficult for the existing Universities to admit the large numbers that seek admission today. Even if more Universities are established, the problem of finding residential facilities for the students will not be quite easy to solve. So, our Government feels that the most practicable solution is to have 25 fully equipped University Colleges where students would be able to follow University Courses and acquire degrees of University standard.

This system once prevailed in this country. Before the present Universities were established there was, what was called, a Colombo University College. There are quite a

number of graduates in this country who studied at the Colombo University College and obtained their degrees. by sitting exams held by Oxford, Cambridge or the London University. The question papers were sent to those Universities. The degrees awarded were of the same standard as were awarded to the internal students of those Universities. That is how we have people with BA (London) and so on. That University College was subsequently transformed into a full-fledged University, so that degrees could be awarded here itself. It was later shifted to Peradeniya. In due course seven such Universities were established. The present effort is to re-introduce that old University College system which prepares students for University degrees. There will be 25 such University Colleges affiliated to one or another of the main Universities. Why has this step become necessary? It is because of the large number of students who are passing out from the institutions of higher education.

Think of the number of students who are already awaiting admission to the Universities. We have now set apart a total of Rs. 3,000 million for the nine Universities that are proposed to be established before the end of this year.

Out of the 14,000 teachers now in service, only 57% are trained teachers. That is a very unsatisfactory position. There are several Training Colleges already established and the training provided is being speeded up. Otherwise, not more than 28,000 could be trained through the existing institutions and that would take 10 years to complete.

Today, 1,200 graduate teachers join the profession every year. During the next ten years there will be 12,000

in service. It is in view of this situation that we are speeding up their training.

Finally, may I say I am extremely happy in being able to be with you on this 105th anniversary of your College. All that I did today was to remind you of some of the objectives of the eminent founders of your College.

You are now aware of the reasons that prompted the establishment of these Dharma Vidyalayas. Ananda College was not started for the mere sake of starting another school. There was a difference in this case; something special. The objective in this instance was to make the students of this College different from those elsewhere. There are many eminent sons of Lanka who have had their education here. They shine in various fields of endeavour. We always esteem their service. But, my only wish is that you would never leave room for those noble objectives to be forgotten. It is very necessary that your conduct is irreproachable. I hope it will be so.

ජනාධිපති ලේකම් කාර්යාලය
25 AUG 2023
පුස්තකාලය